விலை ரூபா: 08.00

Registered as a Newspaper in Srilanka

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (20.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 152

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து



தமிழீழ சட்டக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஐந்தாவது பட்டமளிப்பு விழாவின்போது - அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மாணவர் ஒருவருக்கு பட்டச்சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும், சட்டக் கல்லூரி மாணவர்கள் கொடிவணக்கம் செலுத்துவதை இரண்டாவது படத்திலும், விழாவிற்கு அதிதிகளாகக் கலந்துகொண்டோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# தமிழர்கள் மீது யுத்தத்தை திணிக்கவே சர்வதேச உதவிகள் பெறப்படுகின்றன

## சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

**சர்வதேச சமூகத்திற்கு எங்களால் முடிந்த அளவு உண்மை நிலைகளை விளக்கி இருக்கின்றோம். ஆனால் அரசாங்கம் அதை முறியடித்து சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொண்டு மீண்டும் தமிழர்கள் மீது யுத்தத்தைத் திணிப்பதற்கான ஒரு தந்திரோபாயச் செயற்திட்டத்தை வகுத்துச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**



தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

### உதவி வழங்கும் நாடுகளின் கண்டி மாநாடு

கண்டியில் நடைபெற்றது இலங்கை அரசினது மாநாடு தான். சர்வதேச சமூகத்தை அழைத்து ஒருபக்க சார்பாக, ஒரு தரப்பாக தங்களது தரப்புக் கருத்துக்களை ஒருபக்க சார்பான கருத்துக்களை சர்வதேச சமூகத்திடம்கூறி அதை நம்பவைத்து, அதற்கூடாக சர்வதேச உதவியைப் பெறுகிற நோக்கத்திற்கான மாநாடே தவிர, இங்குள்ள உண்மையான யதார்த்தமான சூழ்லை எடுத்துவிளக்கி, சர்வதேச சமூகத்திற்கு உண்மைகளைச் சொல்லி அதனூடாக சர்வதேச சமூகத்தின் உதவிகளை இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வாழைச்சேனையில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை ரயில் நிலையப் பகுதியிலிருந்து நேற்றுமாலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை 5.15 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த சேகுஇஸ்மின் யூசின் (வயது 25) என்ற முஸ்லிம் இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வாழைச்சேனை பொலிஸ்நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் இராணுவத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாதிக ஹெலஉறுமய எம்.பிக்கள் நேற்றுப் பாராளுமன்றில் குழப்பம்

(கொழும்பு)

திருகோணமலையில் நிறுவப்பட்ட புத் ...

மக்களுக்குச் சார்பாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## கிளைமோர் தாக்குதலில் அதிரடிப்படை சிப்பாய் காயம்

(அம்பாறை)

மொனராகலை அம்பாறை வீதியில் ...

பாதுகாப்பு வழங்கிச் சென்ற விசேட அதிரடிப்படை வாகனமே இக்குண்டுக் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

(கொழும்பு)

திருகோணமலையில் நிறுவப்பட்ட புத்தர் சிலையினை அகற்றுமாறு நீதிவான் உத்தரவிட்டதை ஹெலஉறுமய கண்டித்துள்ளது. ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்ற குழுத் தலைவர் அதுரலிய ரத்ன தேரர் இதுகுறித்துப் பாராளுமன்றின் கவனத்திற்கு நேற்றுக் கொண்டுவந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக் காரணமாகவே இந்தத் தீர்ப்பு தமிழ் மக்களுக்குச் சார்பாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தேரர் உரையாற்றும்போது குறுக்கிட்ட சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டார, நீதிமன்றத் தீர்ப்பினை பாராளுமன்றில் விமர்சிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், விமர்சனங்களை உடனடியாக நிறுத்துமாறும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து கோஷங்களை எழுப்பியவாறு (12 ஆம் பக்கம் பார்க்க)

(அம்பாறை)

மொனராகலை அம்பாறை வீதியில் சியம்பலாண்டுவ 5 ஆம் கட்டையில் நேற்று முற்பகல் நடந்த கிளைமோர் குண்டுத் தாக்குதலில் விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மொனராகலைச் சிறைச்சாலையிலிருந்து அம்பாறை நீதிமன்றத்துக்கு கருணா குழு உறுப்பினர் ஒருவர் அழைத்துச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை வாகனத்திற்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற விசேட அதிரடிப்படை வாகனமே இக்குண்டுக் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

கருணா குழுவின் முக்கியஸ்தரான பாரதி என்பவர் கடந்த 29 ஆம் திகதி அம்பாறையில் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு, குறிப்பிட்ட சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்புக்கு ஜே.வி.பி மாற்றுயோசனைகள் முன்வைப்பு

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி நான்கு மாற்றுயோசனைகளை முன்வைத்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன் பிரதான அடிப்படைத் தத்துவங்கள் நான்கினை அரசு பாதுகாக்கவேண்டுமென ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

இம்மாற்று யோசனைத் திட்டத்தில், பொதுக்கட்டமைப்பானது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதாகவிருத்தல், யாப்பின் விதிகளுக்கு உட்பட்டிருத்தல், நாட்டினுள் சமநிலைத் தன்மையைப் பேணுதல் மற்றும் தெற்காசியாவின் உறுதிப்பாட்டிற்கு எதிரானதாக இல்லாதிருத்தல் போன்றவற்றை கருத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை நகரப் பகுதிகளில் படையினர், பொலிஸார் குவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுமாறுகோரி நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்ற ஹர்த்தால், கடையடைப்பு என்பன காரணமாக நகரின் இயல்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு பதற்றமான சூழ்நிலையே தொடர்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் தெருவில் இறங்கி நடமாட அச்சத்துடன் காணப்படுகின்றனர். பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ள போதும் திருகோணமலை தலைமைக் காரியாலய பொலிஸாரினால் பாதுகாப்புச் சேவையினை வழங்குவதற்கு ஆளணிப் பற்றாக்குறை (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


# மண்டைதீவில் மீளக்குடியமர்ந்தோருக்கு மருத்துவ வசதிகளை செய்து கொடுங்கள்!

## மனித உரிமைகளைப் பாதுகாத்தலுக்கும் மேம்படுத்தலுக்குமான குழு கோரிக்கை

(தென்மராட்சி)

மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படாமை அவர்களது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

எனவே, மண்டைதீவில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கோருவதென நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற மனித உரிமைகளைப் பாதுகாத்தலுக்கும் மேம்படுத்தலுக்குமான மாவட்டக் குழுவின் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இணையத்தின் முன்னாள் தலைவர் வ.ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டததில் மனித உரிமைகள் ஆர்வலர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

இக் கூட்டத்தில் மண்டைதீவில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு படைதரப்பினரால் தரை வழிப்பாதையைப் பாவிப்ப தற்கான அனுமதி அட்டையும், கடல் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி அட்டையும் வழங்கப்பட்டுள்ளமை குறித்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

இதற்கிடையில், மண்டைதீவுப் பகுதியில் இடம்பெற்றுவருகின்ற மனித உரிமைகள் மீறல் விடயங்கள் குறித்து மண்டைதீவு வாழ் பொது மக்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு விதமான உதவிகளையும் கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்ற போதிலும் 1990 ஆம் ஆண்டுமுதல் யுத்தத்தின் கோரப்பிடியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குரிய கொடுப்பனவுகளையோ அல்லது நட்ட ஈட்டினையோ வழங்காமல் இருப்பது வேதனைக்குரியதாகும் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

(க-16)

# ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் வலியுறுத்து

(கண்டி)

மூத்த ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேணடும் என எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் கேட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்று முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குகொண்ட பிரதிநிதிகளிடம் இந்தக் கோரிக்கை எழுத்து மூலம் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்தப்படும் உடல்ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் கொலைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பிலான கடிதங்கள் உலகவங்கி மற்றும் மாநாட்டில் பங்கேற்றும் பல நாட்டுத்தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

இதில் ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், றோகண குமார, நடராஜா அற்புதராஜா மற்றும் அன்ரனி மரியநாயகம் ஆகியோர் கடந்த 4வருட காலப்பகுதியில் கொலை செய்யப்பட்டபோதும், அது தொடர்பில் இலங்கை அரச அதிகாரிகள் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

(ந-4)

## பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டபின்

# ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்குவது சகல நாடுகளினதும் பொறுப்பாகும்

(கண்டி)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொதுக்கட்டமைப்பு உருவாகும் பட்சத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள உதவிகள் விரைவாகவும், இலகுவாகவும் கிடைக்க முடியும் என இலங்கைக்கான ஒல்லாந்துத் தூதுவர் சுசன் பிளங்ஹாட் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டமையை ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தால் தன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ள நிலையில், அவருக்குப் பின்னால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பின் புலமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவாரானால் அதன் பின்னர் ஏற்படும் அசௌகரியங்களிலிருந்து ஜனாதிபதியைப் பாதுகாப்பது அனைத்து நாடுகளினதும் பொறுப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி உருவாக்குவாரானால் நிதிகள் மென்மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# இராசிபலன்

**20.05.2005**
**(வைகாசி 6, வெள்ளிக்கிழமை)**
**துவாதசி பின்னிரவு 5.01 மணிவரை**
**அத்தம் பிற்பகல் 4.27 மணிவரை**
**இராகுகாலம் 10.22- 11.52 மணிவரை**
**சுபநேரம் 5.52 - 7.22 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, போசன சுகம். |
| இடபம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், மனக் கவலை, காரிய இடையூறு. |
| மிதுனம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம், உறவினர் தொடர்பு. |
| கடகம் | கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, இனிய சம்பவம், விருந்துபசாரம். |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, மனோசங்கடம், பொருள் விரயம், முயற்சி தாமதம். |
| கன்னி | தெய்வ சிந்தை, வெகுமானம், போசன நன்மை; மனமகிழ்ச்சி. |
| துலாம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், பிரயாணம், அமைதிக் குறைவு. |
| விருச்சிகம் | தனதானியச் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ தரிசனம் |
| தனுசு | அதிகாரம், பிறர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், சுபநிகழ்வு. |
| மகரம் | உத்தியோக பங்கம், அதிக செலவு, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கும்பம் | வேலைச்சுமை, காரிய தடங்கல், அஜீரண கோளாறு, தெய்வ சிந்தை. |
| மீனம் | தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், உறவினர் வருகை, மனோதைரியம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

—வள்வன்

# பல்கலைக்கழக மாணவருக்கான த. பு. கழகத்தின் உதவித் திட்டம்

பல்கலைக்கழக மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டமாக "மலரவன் நம்பிக்கை நிதியம்" 1998ஆம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது எதிர்காலத்தில் அறிவு, ஆற்றல்மிக்க ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப உதவுமெனத் தமிழர் புனாவாழ்வுக் கழகம் நம்புகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் மாதமொன்றுக்கு 2000 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

வடக்கு- கிழக்கு மலையகம் போன்ற பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு குடும்ப நிதிநிலைமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு இந் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

2005ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக இதுவரை சுமார் 29 மாணவருக்கு மொத்தம் 2 இட்சத்து 32 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நிதி உதவிகேட்டு வந்துள்ள மொத்த விண்ணப்பங்களோடு ஒப்பிடும்போது, இதுவரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமே, எனினும் மலரவன் நம்பிக்கை நிதியத்தில் நிதிவளம் கூடும் பட்சத்தில் விண்ணப்பித்துள்ள சகல மாணவருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி வழங்கும். (ந-4)

# மரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

(தென்மராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற சுனாமிப் பேரலையின் காரணமாக மரணித்த 2 ஆயிரத்து 514 பேரில் இன்னமும் 325 பேருக்கான மரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இவர்களுக்கான மரணக்கொடுப்பனவுகளை துரிதப்படுத்தும்படி வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. (க-16)

# வர்த்தக நிலையங்களை செவ்வாயன்று திறக்கலாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22,23,24 ஆகிய தினங்கள் தொடர்ந்து வர்த்தக விடுமுறை தினங்களாக வருவதால் பொது மக்களின் நலன்கருதி 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் என யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (க-7)

# ஐந்து அகதிகள் கச்சதீவில்

கச்சதீவில் 5 அகதிகள் அனாதரவாக கைவிடப்பட்டுள்ள நிலையில் இறக்கிவிடப்பட்டுள்ளதாக நெடுந்தீவுக்கு வந்த மீனவர்கள் தெரிவித்தனர். நெடுந்தீவில் நேற்றுமுன் தினம் கரையொதுங்கிய சடலத்தைப் பார் வையிடுவதற்காக வருகை தந்த மீன வர்களே இதனைத் தெரிவித்தனர்.

இந்த 5 அகதிகளும் கடந்த திங்கட் கிழமை கச்சதீவில் இறக்கி விடப்பட்ட தாக அவர்கள் தெரிவித்தனர். (ந-4)

# காலங்கடந்தேனும் உண்மை புரிந்தது

## ஜனாதிபதியின் நிலைப்பாடு குறித்து ஐ.தே.க.எம்.பி

(கொழும்பு)

ஜே.வி.பியின் செயற்பாடுகளை தாமதித்தேனும் ஜனாதிபதி புரிந்து கொண்டுள்ளமையை வரவேற்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணா நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய கருத்துக்கள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அம் மாநாட்டில் தெரிவித்த விடயங்கள் குறித்து நாம் அதிர்ச்சி அடையத் தேவையில்லை ஏனெனில், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தலுக்குச் செல்லும் போது, எம்மைக் கலைத்தபோது இதனைக் கூறினோம்.

ஜே.வி.பியுடன் இணைந்து இவ்வாறு செயற்படமுடியுமா எனக் கூறினோம். ஆனால், அவர்களுக்கு உண்மை நிலை இன்று புரிந்துள்ளது என நான் நினைக்கின்றேன். இது மிகப் பெரிய விடயமாகும்.

இதனை அன்றே நாம் தெரிவித்தோம். ஜனாதிபதி தாமதித்தேனும் இன்று இந் நிலைப்பாடுகளை உணர்ந்து கொண்டுள்ளார்.

நாட்டைக் காப்பாற்றுவது அவசியமென ஜே.வி.பி கூறும் அதே நாட்டை நாமும் காப்பாற்றுவது அவசியமாகும். ஜே.வி.பியிடம் உள்ள கொள்கைகள் அனைத்தும் தவறானவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# தொலைபேசிக் கட்டணங்கள் குறித்த முறைப்பாடுகளை அரசு கவனிக்கும்

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணங்கள் தொடர்பாக பாவனையாளர்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளுகின்றது என தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் டி.என்.ஜெயரத்தின தெரிவித்தார்.

மின்சார கட்டணங்களின் முறைகேடுகள், மேலதிக அறவீடுகள் என்பன பற்றி பல முறைப்பாடுகள் அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

தொலைத் தொடர்பு ஒருங்கமைப்பு ஆணைக்குழுவும் இந்த விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றது.

சந்தாதாரர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க ஆணைக்குழு தவறினால் அவர்களைப் பாதுகாக்க புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொலைபேசிக் கட்டணங்களில் முரண்பாடுகள் இருக்குமாயின் பொது மக்கள் அது குறித்து அமைச்சுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுள்ளார். (க-9)

## கோல்களத்தால் சூழல் பாதிப்பு

(இணுவில்)

உடுவில் மல்வம் கொல்களத்தில் இறைச்சிக் கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படாமையால் சுற்றுப்புறமும் அருகிலுள்ள கிணறுகளும் மாசடைவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக் கொல்களத்திற்கு கதவு போடப்படாமையால் பொதுமக்களில் சிலரும் அவ்விடத்தில் கழிவுகளைக் கொண்டு வந்து போடுகின்றனர்.

இதனால், மென்மேலும் இப்பகுதி மாசுபடுவதாக அப்பகுதி விவசாய சம்மேளனத்தினர் உடுவில் பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளனர். (க-7-122)

# அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிக்கும் ஜே.வி.பி. அவற்றின் நிதியுதவியை ஏற்குமா?

## வினா எழுப்புகிறார் ஐ.தே.க. எம்.பி.கபீர் ஹாசிம்

2005 ஆண்டுக்கான இலங்கையின் அபிவிருத்திக்கான உதவி வழங்கும் மாநாட்டின் முதல்நாள் அமர்வின் போது இலங்கைக்கு கிடைத்த 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களில் 50 சதவீதமானவை அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையாகுமென ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக வீதியில் இறங்கி கூச்சமில்லாமல் கூச்சல்போடும் அரசின் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி.இந்த நிதியினை ஏற்குமா அல்லது அதற்கும் முட்டுக்கட்டைபோட்டு அரசாங்கத்தை மட்டுமல்ல மக்களையும் ஏமாற்றுமா? என அவர் கேள்விக்கணை தொடுத்தார்.

இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு பாராளுமன்றத்துக்கு முதலில் தெளிவாக அறிவிக்க வேண்டும் என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை தொடர்பான பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தக் கூட்டமைப்பு அரசாங்கம் விவசாயத்துறையை கைத்தொழில் துறையை முன்னேற்றுவோம் என்று தெரிவித்திருந்தது. இவையெல்லாம் வெறும் தேவதைக்கதைகளாகி விடடன. பொருளாதார முதலீடுகளைப் பாதுகாப்பதாகவும் உறுதி அளித்த அரசாங்கம் இப்பொழுது அந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாமல் தடுமாறி நிற்கின்றது.

இவ்வாறான பலவீனமான பணக் கொள்கைகளினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐ.தே.க.விவசாயத்திறகு எதிரான கட்சி என்று ஜே.வி.பி. பிரசாரம் செய்திருந்தது. ஆனால் ஜே.வி.பி.இப்பொழுது என்ன செய்கின்றது? நெற்காணிகள் எண்ணிக்கை கடந்த ஓராண்டில் குறைவடைந்துவிட்டன. விவசாய அமைச்சை தம் கைகளில் வைத்திருக்கும் ஜே.வி.பி. என்ன செய்கின்றது? பொருளாதாரக் கொள்கை இல்லாதபோது எப்படி உங்களுக்கு உதவ முடியும் என்று உலக வங்கி தெரிவித்திருக்கின்றது. ஜே.வி.பியின் பகட்டான பேச்சினாலும் பயமுறுத்தல்களினாலும் மட்டுமே அரசாங்கம் தற்போது நடைபெற்று வருகின்றது.

இலங்கை மின்சார சபைக்கு 15 மில்லியன் ரூபா மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மானியங்கள் ஏழை மக்களைச் சென்றடையவில்லை. டாட்டா வாகனங்களிலும், பராடோ வாகனங்களிலும் செல்லும் செல்வந்தர்களையே மானியங்கள் சென்றடைகின்றன. பால்மாவின் விலை ஒரே தடவையில் அதிகரிப்பட்டுள்ளது. இது சாதனை என்று கூறவேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரிப்பினால் சாதாரண மக்கள்மீது பெரும் வாழ்க்கைச் சுமை சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் உண்மை நிலைப்பாட்டை பாராளுமன்றில் மட்டுமல்ல மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும் பீற்றர் ஹெரோல்ட்டை நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறிய ஜே.வி.பியினர் கண்டி உதவி வழங்கும் மாநாட்டில் அவருடன் சரிசமனாக அமர்ந்து இருக்கின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிககைகளை ஆராய பாராளுமன்றத் தெரிவுகுழு அமைக்கப்படவேண்டும் என்று ஆளும் தரப்பினர் பிரேரணை முன்வைத்துள்ள நிலையில் கண்டி உதவி வழங்கும் மாநாட்டில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தியோகபூர்வ அழைப்பைப் பெற்றிருந்தன. இதுகுறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன எனபது பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும்.

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறிய அரசாங்கம் இப்பொழுது அவர்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. அரசாஙகத்தின் தவறுகளைப் பார்த்துக்கொண்டு எம்மால் அமைதியாக இருக்க முடியாது. எதிர்க் கட்சிகள என்ற வகையில் எமக்கும் பொறுப்பு இருக்கின்றது. 2.2 பில்லியன் டொலர் உதவி கிடைக்கும் நிலையில் அரசாஙகத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் அல்லவா?

அரச ஊழியர்களுக்கு சமபள உயர்வு பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பால் வழங்குங்கள. மின்சார சபையில் நஷ்டத்தை ஏற்படுத்திய மூன்று திருடர்கள அமைச்சரவையில் உள்ளனர் என்று அமைச்சர்களே தெரிவிக்கின்றனர். இதுபற்றி ஆராய முடியுமல்லவா?

ஜனாதிபதி நிதியத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய் ஊழல்கள் நடந்துள்ளன. இவைபற்றி விசாரணைகளை நடத்துங்கள் இந்த அரசாங்கம் வாக்குறுதியளித்த எந்தவிடயத்தையும் நிறைவேற்றவில்லை. இப்பொழுது 2.2 பிலலியன் டொலர் கிடைக்கவுள்ள நிலையில இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் வீதியில் இறங்கிப் போராடி அரசாங்கத்தை அசௌகரியப்படுத்துவது எமது எண்ணம் அலல என்றார். (ற-4)

### திருமலையில் இயல்பு நிலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இயல்பு நிலை திரும்பியிருப்பதாக கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜய்சிங்க தெரிவித்துள்ளார்.

அபயபுர அநுராதபுரம் சந்தி, பாறையூற்றுப்போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட பதற்ற நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்புக்கள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.(க-2)

### ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தும் ஆன்மீக நிகழ்வில் இன்று பிற்பகல் 6.00 மணிக்கு சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் "பேசா அனுபூதி பிறந்ததுவே" எனும் விடயம்பற்றி சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (க-5)

# ஜனாதிபதி ஆட்சியை கையளிக்க முன்வந்தால் ஐக்கிய தேசியக்கட்சி அதனை நிராகரிக்கும்!

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள பொதுக்கட்டமைப்பு, மின்சாரசபை மறு சீரமைப்பு போன்ற முக்கிய விடயங்களில் அரசின் பங்காளி கட்சியான ஜே.வி.பி விடாப்பிடியாக முரண்பட்டு வருகிறது.

இந் நிலையில் அரசைக் கொண்டு நடத்துவது அசாத்தியமாக இருப்பதால் ஆட்சியை ரணில் விக்ரம சிங்கவிடம் கையளித்து விடுவதே சிறந்ததென பிரதமரே ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

ஆனால் ஜனாதிபதியோ அல்லது பிரதம மத்திரியோ ஐக்கிய தேசியக்கட்சியிடம் ஆட்சியை கையளிக்க முன்வந்தால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை மாறாக மக்கள் எம்மிடம் ஆட்சிப் பொறுப்பை கொடுத்தால் மாத்திரமே நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம்.

இவ்வாறு கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். மாத்தளை அலுவிகாரையில் அண்மையில் நடைபெற்ற "இன்றைய அரசியல் நிலை" பற்றி ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெருந்திரளான கட்சி ஆதரவாளர்கள் கூடியிருந்த இக் கூட்டத்தில் மத்திய மாகாண எதிர்கட்சித் தலைவர் வஸந்த அலுவிகார வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஜி.எஸ்.பீரிஸ் இங்கு தொடர்ந்தும் பேசுகையில் ஜனாதிபதியின் கைகளில் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. அதனை இப்போது ஜே.வி.பியினர் செல்லாக்காசாக ஆக்கிவிட்டனர். மின்சாரசபைக்கு கடந்த 11 மாதங்களில் 60 ஆயிரத்திலிருந்து 90 ஆயிரம் மில்லியன் வரை நட்டம் ஏற்பட்டுள்ளது.

#### ஜனாதிபதியின் சூளுரை

என் பதவியில் நான் கொண்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு நாட்டின் நலனைப் பாதுகாப்பதற்காக மின்சாரசபை மறு சீரமைப்பு தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அங்கீகரிக்கச் செய்வேன் என ஜனாதிபதி சூளுரைத்தார்.

ஆனால் அவரின் அந்த அதிகாரததையே மண் கவ்வச் செய்துவிட்டது. தனது கொள்கைகள் எதனையும் நடைமுறைப்படுத்த முடியாத நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டுள்ளார்.

#### பொதுக்கட்டமைப்பு

பொதுக்கட்டமைப்பை அவசர காலசட்டத்தை பிரகடனப்படுத்தியேனும் நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்று ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் இந்தப் பொதுக் கட்டமைப்பு விவகாரத்தின் உள்ளடக்கம் பற்றி தனக்கு எதுவும் தெரியாதென பிரதமர் கூறுகிறார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் இதுபற்றித் தனக்கு எதுவும் தெரியாதெனக் கூறுகிறார். ஐக்கியதேசியக்கட்சிக்குக்கூட இந்த பொதுக்கட்டமைப்பு ஆலோசனையின் உள்ளடக்கம்பற்றி எதுவும் தெரியாது.

விபரம் தெரிந்தால் தான் அது பற்றி கருத்துக்கூறலாம்.

#### ஜனாதிபதியின் அக்கறையின்மை

அரசைக் கலைத்து எப்படியாவது அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் எனபதிலேயே ஜனாதிபதி கவனமாக இருந்தாரேயொழிய மக்களைப் பற்றியோ நட்டைப்பற்றியோ அவர் சித்திக்கத் தவறிவிட்டார்.

#### கூட்டணிக்குள் பிளவு

இப்போது உள்வீட்டு விவகாரங்களை பகிரங்கமாக ஒருவரையொருவர் விமர்சித்து வருகிறார்கள் ஜனாதிபதியின் செயற்பாடுகள் அத்தனைக்கும் அவரின் கூட்டணிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு உருவாகியுள்ளது.

அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு நேரடியாக மக்களுக்குத்தான் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இன்றைய ஆட்சி மீது ஆளுபவர்களுக்கே வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

#### சட்டம், நீதி சீர்குலைந்துள்ளது

பிரபல ஊடகவியலாளர் ஒருவரைக்கடத்திச் சென்று துப்பாக்கியால் சுட்டு இந்த நாட்டின் சட்டங்களை உருவாக்கும் பாராளுமன்றத்திற்கு அருகிலேயே சடலத்தைப்போட்டுச் செல்லும் அளவு நாட்டின் சட்டமும் நீதியும் சீர்குலைந்துவிட்டன.

ரணில் விக்கிரமசிங்கவினால் செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அன்று எதிர்த்த ஜனாதிபதி அந்த ஒப்பந்தத்தின் சக்தியால்தான் இன்று நாட்டை ஆளுகிறார் என்றார். (க-5)

# மேல் மாகாணசபைக் கூட்டத்தொடர் ஜூன் 7இல்

மேல் மாகாணசபை கடந்த் செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடிய போது சபை சட்டத்தொடரை எதிர் வரும் ஜூன்மாதம் 7ஆம் திகதி நடத்துவதென்று சகல கட்சிகளினது இணக்கத்துக்கு அமைய தீர்மானிக்கப்பட்டது.

மாகாண சபையின் சட்டவிதிகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த சட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரலில் சமர்ப்பிப்பது அவசியமென்று சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டதாக மேல் மாகாண சபைத் தலைவர் யகத் அகங்கே தெரிவித்தார்.

இதேவேளை, தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவிருப்பதாக மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார். (ற-8)

# இந்திய-இலங்கை தமிழ்ச்சங்கங்களை ஒருங்கிணைக்க குழுக்கள் அமைப்பு

இந்திய-இலங்கை தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு அமைப்பதுபற்றிய கலந்தாய்வுக் கூட்டம் சென்னையில் உலகத் தமிழர் பேரமைப்பு அலுவலகத்தில் அதன் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பேராசிரியர்கள் சு.ப.அறவாணன், ஆறு அழகப்பன், மணவை முஸ்தாப மற்றும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைக்க முதலில் தனித்தனிக்குழுக்கள் அமைப்பது என்றும், பிறகு இரண்டையும் இணைத்து ஒரே குழுவாக ஆக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவின்படி, இந்திய, இலங்கைத் தமிழ் அமைப்புக்களின் ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப் பட்டது. இலங்கைத் தமிழ் அமைப்புக்களின் ஒருங்கிணைப் புக்குழுவின் அமைப்பாளராக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ற-4)

# புலிகளின் ஒத்துழைப்பின்றி அபிவிருத்திப் பணிகள் கடினம்

## -ஹரீம் பீரிஸ்

விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பின்றி வட-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதென்பது கடினமான காரியமாகும் எனவே பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் அதனை இலகுவாக மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

கண்டி, மகாவலி ரிச் ஹோட்டலில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றிய அவர் பொதுக்கட்டமைப்பு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுவிடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

மாநாட்டில் கலந்துகொண்ட பெருமளவானவர்கள் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாககப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். வட-கிழக்கில் சுனாமி மீள் கட்டுமானப் பணிகளை இலகுவாக்க இது உதவும் என்பது அவர்களின் கருத்தாகவுள்ளது.

இதுவே உண்மையான நிலைப்பாடும, கருத்தாகும் அதனை சர்வதேச உதவிவழங்கும் நாடுகள் உணர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது எனத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிகள் உள்ளன. அப்பகுதிகளில் புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு புலிகளின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இதனை அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் இதற்காகவே பொதுக்கட்டமைப் பென்பது அவசியமாகின்றது. எனவே பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதன் அவசியத்தை அரசும், விடுதலைப்புலிகளும் உணர்ந்துள்ளனர்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதிக்கு உதவ வேண்டுமென்ற கோரிக்கையினையும் நான் முன்வைத்தேன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இப்பகுதியினை மீள் கட்டுமானம் செய்வதுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளும் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் நான் வலியுறுத்தினேன் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

# முஸ்லிம் பொதுக்கட்டமைப்பு செயலகம் உருவாக்கப்படுவது மிக அவசியம்

## - பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன்

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் சீரழிந்து போயுள்ள வடக்கு- கிழக்குக் கரையோரப் பிரதேசங்களை மீளமைப்பதற்காக முஸ்லிம் பொதுக்கட்டமைப்பு செயலகம் என்ற ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனறு தகவல் மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட மீள் கட்டமைப்புப் பணிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை தொடர்பாக பிரதியமைச்சரை அவரது காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்த அமபாறை மாவட்ட கரையோரப் பிரதேச பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் ஒரு தனித்தரபபாகவும், கையொப்பதாரராகவும் செல்லவேண்டுமென்று விரும்புகிறார்கள். எனவே, முஸ்லிம்களை இந்தப் பொதுக்கட்டமைபபில் அரசாங்கத்தைப் போல, விடுதலைப்புலிகளைப் போல ஒரு தனித்தரப்பாக மூன்றாவது கையொப்பதாரராக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனபது முஸ்லிம்களின் கோரிக்கையாகவுளளது.

பொதுக்கட்டமைபபு முஸ்லிம்களுக்கென்று தனியாக ஒரு செயலகம் வேண்டுமென்று நாங்கள் உத்தேசித்திருக்கின்றோம். ஏனெனில் சமாதான செயலகம் என்று சொல்வது, சமாதானத்தோடு தொடாபுடையதாகச் செல்லக்கூடியதாகவிருக்கின்றது.

அரசாங்க மற்றும் விடுதலைபபுலிகளின் தரப்பிலோ சமாதானச் செயலகத்தின் பிரதிநிதிகள் தான் இந்தப் பொதுக்கட்டமைப்பில் பங்குபற்றுவார்கள், நியமிக்கப்படவிருக்கின்றார்கள் என்று நாங்கள் அறிகின்றோம்.

சமாதான செயலகத்தின் நோக்கம் வேறானது. பொதுக்கட்டமைப்புக்கும், சமாதானத்துக்கும் தொடர்பில்லை என்று ஜனாதிபதியும், அரசாங்கமும சொல்லியிருக்கின்றனர்.

மீள் கட்டமைப்புப் பணிகளுக்கும் சமாதானத்துக்கும் தொடர்பில்லை என்பது உண்மையாகவிருக்குமானால், சமாதான செயலகத்திலிருந்து, பிரதிநிதிகளை நியமிப்பதைவிட பொதுக கட்டமைபபுக்கு என்று தனியான செயலம் அமைக்கப்பட வேண்டும எனவும் அவ்வாறான செயலகங்களில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படவேண்டும எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ர-4)

# தெங்குவரி கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவும்

(கொழும்பு)

தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திக்கு தெங்கு வரி பெருமளவு உதவுமென உயர்தொழில்நுட்ப தேசிய கைத்தொழில் அமைச்சர் ரோஹித்த போகல்லாகம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தை நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சா, தெங்கு வரி மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தில் 12 இலட்சம் ரூபா தெங்கு கைத்தொழில் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் இத்தகைய வரி பாவனையாளர்களைப் பாதிக்கும் என்று குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் பி.சிறி.விஜய நாயக்க நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரிப்பில உள்ளூர் உறபத்திக்கு விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (க-9)

# திருநெறிய தெய்வீக விழாவில் இன்று...

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்த சுவாமிகளின் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தா ஆதீனத்தால் ஆதன கலாமண்டபத்தில் நடாத்தப்பட்டு வரும் திருநெறிய தெய்வீகவிழாவின் ஆறாம் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

செஞ்சொற் செல்வா ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்வில் வி.சிவஞானசேகரம் வர்வேற்புரையை நிகழ்த்துவார். தொடாந்து 5.30 முதல் 6.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

மாலை 6.00 மணிமுதல் 6.30 வரை இணுவில் இந்துக் கல்லூரி மாணவிகளின் பாடடு, வயலின், மிருதங்கம், கடம் போன்ற கலை நிகழவுகள் இடம்பெறவுள்ளன. (ர-5)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுபொருள்



(கொழும்பு)

திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை டச்சு குடாக் கடலில் நடைபெற்றபோது மீனவர் நிவாரண நம்பிக்கை நிதியத்தினால் 25 கடற்படகுகளும் கண்ணாடி இழைப்படகுகளும் வழங்கப்பட்டன.

இந்நிதியம் தேசிய அபிவிருத்தி வங்கிக்குச் சொந்தமானது.

மேற்படி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஹால் வெலிக்கல இவற்றை மீனவர்களிடம் வழங்கினார். இதில் நிதியத்தின் உதவப் பொதுமுகாமையாளர் சோமரட்னவும் கலந்து கொண்டார்.

மேற்படி தேசிய அபிவிருத்தி வங்கி 1978இல் ஸ்தாபிக்கப்பட்டது. 1993 இல் தனியார்மயப்படுத்தபபடடது. மேற்படி வங்கி சுனாமியினால் பாதிக்கபபடட மீனவர்களுக்கு உதவிபுரிய தீர்மானித்தது. இதன்படி புதிய படகுகளை இலங்கையின் 11 மாவட்டங்களிலுள்ள மீனர்வகளுக்கு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தது.

இதன்படி திருகோணமலை மூன்றாவது மாவட்டமாகும் என சோமரட்ன தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 42 படகுகளையும் 25 கனோஸ் படகுகளையும் வழங்கியுள்ள வங்கி கிடைக்கும் நிதியைப் பொறுத்து தனது இரண்டாவது கட்டத்தையும் அமுல்படுத்தும். (ர-4,6)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும வாராந்த ஆன்மீக நிகழ்வில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆழ்வார்கள் என்னும் விடயம பற்றி ஆசிரியர் எஸ்சுதன் ஆனமீக சொற்பொழிவாற்றவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து அடியார்களுகக்கு அன்னதானம் வழங்கபபடும. (க-7,35)

# சமரச பூமி நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கவிவேழம் ஜெயக்குமார் குமாரசாமியின் 'சமரசபூமி' நூல் அறிமுகவிழா இன்று பி.ப.3.00 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியா இரா.சிவச்சிந்திரன் வாழ்த்துரையையும், இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன அறிமுகவுரையையும் வழங்கவுள்ளனர்.

நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி. விசாகருபன், யாழ்.பல்கலைக்கழக தமிழத்துறை விரிவுரையாளர் ஈ.குமரன், யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் இ.அருட்செல்வி ஆகியோர் வழங்கவுள்ளனர். (க-2)

# தேவை மதிப்பீடு

(பொன்னாலை)

"நியாப் II" உதவித் திட்டத்தின கீழ் வலி.மேற்குப் பிரதேச செயலா பிரிவின் மையக் கிராமமாகத் தெரிவுசெய்யபபட்ட அராலி, வண்ணபுரம் கிராமத்தின் தேவை மதிப்பீடு கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படடது.

பிரதேச செயலக திட்டமிடல பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட இத் தேவை மதிப்பீட்டின் மூலம் கிராமத்தின் சகல அபிவிருத்திகள் குறித்தும் ஆராயப்படடவுள்ளதாக செயலக அபிவிருத்தி இணைப்பாளர் இ.பானுமதி தெரிவித்தார். (க-7,49)

# வலைகள், மீன்களை திருடும் கூட்டம்

(பொன்னாலை)

பொன்னாலையில் கடற்றொழிலாளர்கள் கடற்கரையில் வைக்கப்பட்ட தமது மீன்பிடி வலைகள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இரவு வேளைகளில் தமது கூட்டு வலைகளுக்குள் இருக்கும் மீன்கள், இறால் எனபனவும் திருடப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (க-7,49)

# வைகாசிப் பொங்கல்

(இணுவில்)

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் எதிர்வரும் திங்கட்கிழமை 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. (க-7,49)


நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

திருஞான சம்பந்த சுவாமிகள் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

திரு நெறிய தெய்வீக விழா

இடம் - ஆதீன கலாமண்டபம் 20-05-2005 வெள்ளி ஆறாம் நாள்.

நிகழ்வுகள்

மாலை - 4.30 - 5.30 வரை:- மங்கல இசை - அரியாலை எஸ்.யசோதரன் குழுவினா. இறைவணக்கம் - K.கீர்த்தனன்

மங்கல விளக்கேற்றல் -

வரவேற்புரை - திரு.வி.சிவஞானசேகரம்

மாலை - 5.30-6.00 வரை:- சிறப்புச் சொற்பொழிவு - கலாநிதி - மா.வேதநாதன் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை) யாழ்.பல்கலைக்கழகம்.

மாலை - 6.00 - 6.30 வரை இசை அரங்கு - பாட்டு: யதுநந்தினி இராமநாதன் யா/இணுவில் இந்துக் கல்லூரி மாணவி.

வயலின் - ஜெனனி நல்லைநாதன், மிருதங்கம் - கிருபா அனந்தகோபன், கடம் - A.செல்வரத்தினம்,

மாலை - 6.30-7.45 வரை இசைக்கச்சேரி, பாட்டு - வாஸஸ்பதி ரஜேந்திரன், வயலின் - பாய்க்கிய லட்சுமி நடராசா, மிருதங்கம் - T.வரோதயன், கடம் - S.விமல் சங்கர்

மாலை 7.45 - 9.00 வரை:- வில்லிசை - கலாபூஷணம் கலாவினோதன் திரு.கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினர்.

விளம்பர அனுசரணை - E.S.பேரம்பலம் சக நிறுவனம்

இல.50, 52, 54, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

(C/1375)


# சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் சுற்றுலா தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்குப் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மத்திய மாகாணசபை இதற்கு உதவியாக விசேட சுற்றுலா பயணிகள் கட்டுத் தொகுதியொன்றை மாத்தளையில் நிறுவியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கென மாகாணத்தின் வர்த்தக சுற்றுலாத்துறை அமைச்சு 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தச் சுற்றுலா கட்டடத் தொகுதியில் சுற்றுலா தகவல் நிலையம், ஹோட்டல், பாடசாலை ஆகியன அமைந்துள்ளன. (க-9)

# சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் ஒத்திவைக்கப்பட்டது.

சாதாரணமாக பாராளுமன்றக் கூட்டத் தொடரை நடாத்துவதற்குக் குறைந்தது 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் சமுகம் அளித்திருக்கவேண்டும். இருப்பினும் நேற்றுமுன்தினம் 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே சபையில் சமுகமளித்திருந்தனர்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டமூலம் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. பாராளுமன்றக கூட்டத் தொடரின் போது எழுந்து நின்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க சட்டத் தொடரை நடாத்துவதற்கு போதுமான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இல்லையெனத் தெரிவித்தார்.

இதற்கமைய நேற்றுமுன்தினம் கூட்டத் தொடருக்குத் தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜய ரத்தின நடவடிக்கைகளை ஒத்திவைத்தார். (ர-8)

## காணாமல் போனவர்களுக்கான

# மரண அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள பலர் காத்திருப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் காணாமல் போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பலா காததிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினா இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

காணி நட்ட ஈட்டைப் பெறுவதற்காக மாத்திரம் மரண அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படுவதாகக் கொள்ளமுடியாதென்றும், மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாததன காரணமாக மக்களுக்குப் பல்வேறு அசௌகரியங்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மரணங்களைப் பதிவு செய்யும் தற்காலிக ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிபபு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எத்தகைய சட்டங்களை இயற்றினாலும் அவை உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் எதுவித பலனும் இல்லையென்று விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினா ஜெனல் பிறேமசிறி தெரிவித்தார்.

இந்த உத்தேசச் சட்டமூலத்தைக் காலம் தாழ்ததியே சமர்ப்பித்து இருப்பதாகவும் பயங்கரவாதம், அரச விரோத செயல்கள், மக்கள் புரட்சி ஆகியவற்றின் காரணமாக காணாமல் போனவர்கள் சார்பில் மரண அத்தாட்சிப் பத்திரங்களை துரிதமாக வழங்குதற்கு முயற்சிப்பது குறித்து தமக்கு சநதேகம் எழுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-8)

# பேச்சை மீள ஆரம்பிப்பதற்கான கால அட்டவணை எதுவும் இல்லை

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

சுனாமியால் மீள் நிர்மாணத்திற்கான உத்தேச பொதுக்கட்டமைப்பை அமைத்தல் மற்றும் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சை மீள ஆரம்பித்தல் போன்றவற்றின எல்லை குறித்து தீர்மானிக்கப்படவில்லை என்றும் அதற்கான நேர அட்டவணை எதுவும் இல்லை என்றும் வெளிவிவகார அமைசசர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

உதவி வழங்கும் மாநாட்டையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு சமாதான முயற்சி குறித்து கால எல்லை ஏதாவது அரசாங்கத்திடம் உள்ளதா? என்று கேட்கப்பட்டபோது நாம் எடுக்கவுள்ள நடவடிக்கை குறித்து ஜனாதிபதி தனது ஆரம்ப உரையில் தெரிவித்துள்ளார். ஆனால இவை குறித்து கால அடடவணை எதுவும் இல்லை எனத் தெரிவித்தார். இதேவேளை ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளித்த கதிர்காமர் மாநாட்டிலிருந்து இடைநடுவில் வெளியேறிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ர-4)

## இன்று ஒரு தகவல்

# கங்கை நீர்

ஒருவர் வந்தார். "சார்! நான் நிறைய பாவம் செய்து விட்டேன். அவற்றைத் தொலைக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்ன செய்யலாம்?" என்று கேட்டார். "காசிக்குப் போய் கங்கையில் குளித்துவிட்டுவாருங்கள்" என்றேன். "நான் அந்த ஊரில் இருந்து தான் சார் வருகிறேன். எனக்குச் சொந்த ஊரே அது தான்" என்றார்.இவரை எந்த ஊருக்கு அனுப்புவது?

கங்கை புனிதமானது என்று ஆன்மீகவாதிகள் கூறுகின்றனர். அதையே தான் இப்போது விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். "கங்காதீர்த்தம் கொண்டு வந்திருக்கிறேன் அது எவ்வளவு காலமானாலும் கெட்டுப்போகாது சார்" என்று சொல்வார்கள் அது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? கங்கை நதிநீர் இருக்கிறதே அது மற்றய நதி நீர் மாதிரி இல்லை. அதற்கு சில விசேட குணங்கள் இருக்கின்றது.

கங்கை நீர் ஒரு சிறந்த கிருமிநாசினி. அது எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா? புதுடெல்லியில் மலேரியா ஆராய்ச்சி மையம் ஒன்று உள்ளது. அதிலுள்ள விஞ்ஞானிகள் மலேரியா காய்ச்சல் சம்பந்தமாக சில ஆராய்ச்சிசெய்தனர் அவர்கள் என்ன கூறுகின்றனர் தெரியுமா?

மலேரியா கிருமிகளை பரப்பக்கூடிய கொசுக்கள் எந்தவிதமான தண்ணீரிலும் வசிக்குமாம். ஆனால் கங்கை நதி நீரில் மட்டும் அது வளராதாம். டில்லிக்குப் பக்கத்தில் கங்கை நதியோரம் உள்ள சில கிராமங்கள், யமுனை நதியோரமாக உள்ள சில கிராமங்களிலெல்லாம் ஒரு ஆய்வு நடத்தினார்களாம். அந்தக் கிராமங்களில் மேனிலை நீர்த்தொட்டிகளில் உள்ள தண்ணீரைச் சோதித்துப் பார்த்திருக்கின்றனர். கங்கை நதி நீர் இருந்த தொட்டிகளில் மலேரியா நுளம்புகள் அறவே இல்லை. யமுனை நதிநீர் இருந்த தொட்டிகளில் அது அதிகமாக இருந்ததாம்.

டில்லியில் மயூர்விகார் கொலனி என்று ஒரு பகுதியில் கங்கை, யமுனை என இரண்டு நதி நீரையும் கலந்து விநியோகிக்கின்றனராம. அங்கே உள்ள தொட்டிகளில் அந்த கொசு அறவே வளர்வதில்லையாம். இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் கங்கை நீர் எந்த நீருடன் கலந்தாலும் அதில் மலேரியா கொசு வளர்வதில்லை என்று தெரிகிறது. மலேரியா கிருமி மட்டுமல்ல எந்தக் கிருமியுமே அதில் இருக்காது போலிருக்கிறது.

பிரெஞ்ச நாட்டு மருத்துவ வல்லுனர் ஒருவர் டாக்டர் டி.ஹெரில்லி என்று பெயர். இவர் சில ஆராய்ச்சிகளை செய்தார். அவர் என்ன சொல்கிறார் என்றால் கொலரா,சீதபேதி மாதிரியான நோயால் இறந்தவர்களின் பிணங்கள் கங்கையில் மிதந்து வருவதைப் பார்த்திருக்கிறேன் சாதாரண தண்ணீரில் அதுபோல் வந்தால் சுற்றியுள்ள தண்ணீரில் அந்தக் கிருமிகள் ஏராளமாக இருக்கும். ஆனால் கங்கை நீரில் பிணத்தைச் சுற்றியுள்ள தண்ணீர் கூட சுத்தமாக உள்ளது.

ஒரு கிருமியைக் கூடப் பார்க்க முடியவில்லை அது எனக்கு புரியாத புதிராக உள்ளது என்கிறார். கனடா நாட்டில் மெக்கில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எ.:. சி.ஹரிசன். இவரும் கங்கை நீர் பற்றி ஆராய்ச்சி செய்தார். அவர் "எந்த விதமான கிருமியையும் கங்கை நதி நீரில் போட்டால் மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் அவை இறந்து விடும்" என்கிறார்.

19ஆம் நூற்றாண்டில் அடிக்கடிவெள்ளைக்காரர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு கப்பலில் வந்து போவது வழக்கம். அந்தக்காலத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் டாக்டர் சி.கி.நெல்சன் என்பவர் என்ன சொல்கிறார் தெரியுமா?.

கொல்கத்தாவில் இருந்து இங்கிலாந்திற்குப் புறப்படும் போது நாங்கள் ஹுக்ளி நதிநீரை (மேற்கு வங்கத்தில் கங்கைக்கு ஹுக்ளி என்று பெயர்) எடுத்துக்கொண்டுபோவோம். இங்கிலாந்து போய்ச்சேரும்வரை அது கெடாமல் இருக்கும.ஆனால் திரும்பி வரும்போது இங்கிலாந்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவோம்.அது பாதிவழியிலிலேயே கெட்டுப்போய் விடும். நடுவழியில் எகிப்தில் உள்ள துறைமுகத்தில் புதிதாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவோம்" என்று எழுதியிருக்கிறார்.

அதெல்லாம் இருக்கட்டும். கங்கை நதிநீர் இப்படி கிருமிநாசினியாக இருப்பதற்கு என்ன காரணமாக இருக்கும்?இமயமலையிலுள்ள மூலிகைகள் இதற்குக் காரணம் என்று இந்திய மருத்துவத் துறை வல்லுநர்கள் சொல்கின்றனர். கங்கை நீரில் கதிரியக்க தனிமங்கள் உள்ளன. அதனால்தான் கிருமிகள் அழிந்து விடுகின்றன என்கின்றனர். நவீன விஞ்ஞானிகள்.

வெள்ளி, செம்பு, நிக்கல், இரும்பு,குரோமியம் போன்ற கனரக உலோக தாதுக்கள் கங்கை நீரில் கரைந்துள்ளன. கிருமிகளை அழிக்கக்கூடிய சக்தி அவற்றிற்கு உண்டு. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எப்படியிருந்தாலும் கங்கை நீர் ஒரு கிருமிநாசினி என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் கங்கையில் குளித்தால் எல்லாம் தொலையும் என்று கூறுவார்கள். அங்கே போய் விட்டு வந்தால் எதையாவது விட்டுவிட்டு வரவேண்டும் என்று கூறுவது வழக்கம்.

ஒருவர் இங்கிருந்து காசிக்கு ரயிலில் சென்றாராம். அங்கிருந்து திரும்பி கால் நடையாக இங்கே வந்து சேர்ந்தார். "ஏன்?" என்று கேட்டிருக்கின்றனர். "காசிக்குப் போனால் எதையாவது விட்டு விட்டு வரவேண்டும் என்று கூறி அனுப்பினார்கள். நான் அங்கே போனதும் எனது பணப்பையை விட்டுவிட்டேன்! யாரோ திருடி விட்டான். அதனால்தான் நடந்துவருகிறேன்" என்றாராம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நாட்டை மீளக்கட்டியெழுப்ப பொதுக் கட்டமைப்பு அவசியம்

## அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பு விவகாரம் தற்போது அரசியல் அரங்கில் பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் கட்டமைப்பு நிறுவப்படுவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் கிடைப்பதாக சிலர் கூறி வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் அடங்கியிருக்கும் விடயங்கள் என்ன? அவை பற்றிப் பேசப்பட்டனவா? என்பன குறித்து அரசாங்கத்தில் அங்கம வகிக்கும் கட்சிகளின் பிரமுகர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு வருமாறு,

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மகாவலி அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன**

நாட்டினுள்ளேயே கிடைக்கும் நிதியை வைத்துக்கொண்டு இலங்கை போன்ற ஒரு நாட்டைக் கொண்டு நடத்த முடியாது. அதனை எவ்வித விவாதங்களும் இன்றி ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆழிப்பேரலை அழிவிற்கு முழுநாடும் இலக்கானது. வடக்கும் தெற்கும் ஒரேமாதிரி அவ்வழிவிற்கு முகம் கொடுத்தது. எங்களுக்கு இப்படியே இருக்க முடியாது. ஒரு நாடென்ற வகையில் நாம் மீண்டும் எழுந்து நிறக வேண்டும். அவ்வாறு நாம் எழுந்து நிற்க வெளிநாடுகள எமக்கு உதவுமாக இருந்தால் நாம் ஏன் பின்னடிக்க வேண்டும்?

இது எமக்குக் கிடைத்திருக்கும் மிக நல்ல சந்தர்ப்பம் இதனை தவறவிடுவது ஒரு அரசாங்கம் செய்யக் கூடிய செயலல்ல. இதன்போது குறுகிய நோக்கங்களை பற்றிச் சிந்திக்காது நாட்டைப் பற்றிச் சிந்தித்து நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். நாட்டு நலனையும் பாதிக்கப்பட்ட மக்களையும் பற்றி சிந்திக்க வேண்டும்.

**தேசிய ஐக்கிய முன்னணி தலைவியும் வீடமைப்பு அமைச்சருமான திருமதி பேரியல் அஷ்ரப்**

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார். அது தவிர வேறு ஆவணங்களையோ திட்டங்களையோ நாங்கள் காணவில்லை. ஆழிப்பேரலையால் பாதிக கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம வழங்குவதற்காகக் கிடைக்கும் நிதி சம்பந்தமாக இந்தக் கட்டமைப்பு நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைக்கு வெளியாகியிருக்கும் விபரங்களுக்கமைய இந்தக் கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றி தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஆழிபபேரலையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம் மக்களே. ஏனைய மக்களும் பாதிக்கப்பட்டனர் தான். நிவாரணம் வழங்குகையில் எவ்வித பேதங்களும் இன்றி அவை வழங்கப்பட வேண்டும். தமிழ்,சிங்கள மக்களுக்குக் கிடைப்பது போன்று முஸ்லிம் மக்களுக்கும் தெளிவான பிரதிநிதித்துவம் கிடைக்குமானால் மாத்திரமே இந்தத் திட்டத்திற்கு நாம் எமது ஆதரவை வழங்குவோம்.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி**

தெற்கைப் போன்று வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்வதற்கென அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஒன்றிணைந்து பணியாற்ற பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளனர். இந்தக் கட்டமைப்புக் குறித்து வார்த்தைகளால் கூறப்பட்ட விடயங்கள் மட்டுமே எமக்குத் தெரியும். அதுதவிர வேறு ஆவணங்கள் எதனையும் நாம் கண்டதில்லை. இதுபற்றி கட்சிக்குள் பேசப்பட்டுள்ளது. பாதிக்கபபட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். அது கட்டாயம் செய்தேயாக வேண்டிய ஒரு விடயம்.

வடக்கிலுள்ள மக்கள் முன்னர் யுத்தத்தால் பாதிக்கப்பட்டனர். தற்போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களின் வீடுவாசல்கள திருத்தப்பட வேண்டும்.அதற்கென இந்தப் பொதுக் கட்டமைப்பு நிறுவப்பட வேண்டும். இந்த நாடு தற்போது சமாதானத்தை நோக்கிய பாதையில் உள்ளது. ஒன்றாகப் பணியாற்றக் கூடியதாக இருப்பது இதற்கு மிக அவசியம்.

பொதுக்கட்டமைப்பை செயற்படுத்துவது அதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமையும். பொதுக்கட்டமைப்பை நாம் கண்டதில்லை.அதனைப்பற்றி அறிந்துள்ளோம். இந்தக் கட்டமைப்பு நிறுவப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி உள்ளது. அதனால அதுபற்றி தொடாசசியாகப் பேசப்பட்டாலும இல்லாவிட்டாலும் இதனை நிறுவி செயற்படுத்த வேண்டும.

**லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் திஸ்ஸ விதாரன**

பொதுக்கடடமைப்பு சம்பந்தமான எந்தவொரு ஆவணங்களையும் நாங்கள் கண்டதில்லை. அமைசசரவைக் கூட்டத்தில் இதுகுறித்து ஜனாதிபதி எங்களுக்கு விளக்கமளித்துள்ளார். பாதிக்கப்பட்ட 2 கிலோமீற்றர் தூரத்திற்கே இந்தக் கட்டமைப்பு செயற்படுத்தப்படும்.நாட்டினுள்ளே இதன் செயற்பாடு இருக்காது.

வடக்கு-கிழக்கு உட்பட முழுநாட்டிற்கும் தான் இலங்கை என்கிறோம். எனினும் விடுதலைப் புலிகளினால் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களும் உள்ளன என்பதே உண்மையான நிலை. விருப்பமில்லாவிடினும் நாம் அதனை ஏற்றுக்கொண்டாக வேண்டும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் அந்தப் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என அந்த நாடுகள் கூறுகின்றன.

இந்த உதவிகளைப் பெற வேண்டுமானால் அந்தக கட்டமைப்பு நிறுவப்பட வேண்டும் என்பது அவர்களின நிலைப்பாடு. அப்படியாயின் நாம் அந்த உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் முழு இலங்கை மக்களுக்கும் நிவாரணம் வழங்கவும் இந்தக் கட்டமைப்பு நிறுவப்படல் வேண்டும்.

**மக்கள் ஐக்கிய முன்னணயின் பொதுச் செயலாளர் பியசேன திஸாநாயக்க**

பொதுக்கட்டமைப்பு தொடர்பான பல்வேறு கருத்துக்கள் மற்றும் யோசனைகள் ஊடகங்களினூடாக பல சந்தர்ப்பங்களில் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களில் வெளியான விடயங்களை மட்டுமே நாம் அறிவோம். யாரும் இது சம்பந்தமான ஆவணங்களையோ திட்டங்களையோ எமக்குக் காண்பிக்கவில்லை.

அதனால் பொதுக்கட்டமைப்பு குறித்து சரியாக கருத்துக்களை வெளியிடமுடியாது. ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டணி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கூட இதுபற்றி பேசப்படவில்லை. எங்களுக்கு இது குறித்து விளக்கமளிக்கப்படவும் இல்லை. (ரு-4)

# அனுமதிப் பத்திரமின்றி வாகனம் ஓட்டுவோர் கைது செய்யப்படுவர்

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்டுவோரைக் கைது செய்யும் தொடர்ச்சியான ஒரு மாத திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன்,சாரதி அனுமதிப்பத்திரம்,காப்புறுதிப்பத்திரம் என்பன இன்றி வாகனம் ஓட்டும் அனைத்து சாரதிகளையும் கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து தவறுகள் பற்றி பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவிற்கு பொலிஸ்மா அதிபர் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

அதனையடுத்து சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் ஓட்டும் சாரதிகளைக் கைது செய்யுமாறு அமைச்சின் செயலாளர் விடுத்த பணிப்பிற்கமைய அனுமதிப்பத்திரமின்றி வாகனங்களை ஓட்டும் சாரதிகளைக் கைது செய்யுமாறு நாடு முழுவதும் இருக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

சனி,ஞாயிறு தினங்களில் பெருமளவு பேருந்து வண்டிகளை நடத்துனர்களே ஓட்டுவதாக பொலிஸ திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வாரத்தின் 7 நாட்களும் சாரதிகளால் பணியாற்ற முடியாததால் வார இறுதி நாட்களில் சாரதி அனுமதிபபத்திரமற்ற நடத்துனர்கள் சாரதிகளாகப் பணியாற்றுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. போட்டிக்கு வாகனங்களை செலுத்துபவர்களைக் கண்டால் அப்படிச் செல்லும் வாகனங்களை மறித்து 1மணி நேரம் தாமதிக்கச் செய்தே வாகனத்தை அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

ஆனால் அவசர சந்தர்ப்பங்களில் அவ்வாறு செல்பவர்களுக்கு மட்டும் சலுகைகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகயில் சாரதி அனுமதிப் பத்திரமற்ற 247 முச்சக்கரவண்டி சாரதிகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ரு-4)

# கடவுள் கோயில் கொள்வதால் காயத்திற்கு ஒரு கணிப்பு

நம்மைத் தரிக்கும் இந்த உடம்பு மிக இழிவானது. உடல் ஈனம் மிகுந்துள்ள தோல் எலும்பு



தசை நரம்பு இரத்தம் முதலாய சப்த தாதுக்களால் உருவானது. எத்தனையோ சவர்க்காரக் கட்டிகளால் தேய்த்தும் உடம்பு தேய்ந்ததில்லை. அழுக்கு அடியோடு அற்றதுமில்லை. அவ்வப்போது குளிப்பு முழுக்கினால் உடம்பின் புற அழுக்கு ஒழிந்தாலும் மன அழுக்கு மாய்ந்ததில்லை.

இது ஐந்து கல்லால் ஆன கோட்டை, அந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல், பூளை போகும் கண்வாயில் இரண்டு. குடுமி தள்ளும் காதுவாயில் இரண்டு. சளி சிந்தும் மூக்கிற்கு இரு வாயில். ஓங்காளத்திற்கு வாய் ஒரு வாயில்.

## வெள்ளி நற்சிந்தனை

எரு இடு, கரு இடு வாயில் இரண்டு. ஆக ஒன்பது துவாரங்கள், அவைகளும் ஒன்றிற்கு ஒன்று ஒற்றுமை ஒன்றில்லை.

அதுபோக உடம்பு கேட்ட நேரம் உணவு உண்ணீர், உறக்கம், கொடுக்கவில்லை என்றால் இருந்த பாடில்லை. இது ஒரு புற உபத்திரவம் போக-

நோய் நொடி வந்தால் துன்பத்திற்கு மேல் துன்பம், வயது ஏற ஏற வாதம், பித்தம் சிலோற்பனம் வெளிப்பட்டுக் கூத்தாடுவார்கள். இன்னது தான் என்று பிடிபடாத நோய்கள் பெரிய குழப்பம் பண்ணுவார்கள். கண்டுபிடித்தும் எந்த வைத்திய சிகிச்சைக்கும் இளகாத சந்ததி நோய்கள்.

யாக்கையின் போக்கு இதுவாதலின் ஞான வான்கள் உடம்பிற்குப் பெரிய நடப்புக் கொடுப்பதில்லை.

திருமூலர் இந்த விசித்திர உடம்பைப் பேணுவதற்குக் காரணம் காடுகின்றார். உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டு இருப்பதனால் நாம் உடம்பை இருந்து பேணுகின்றேன்.

**சிவ சண்முகவடிவேல்**

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறு பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொன்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே." □

# தமிழ்த் தேசியத்திற்கான சர்வதேச ஆதரவை உருவாக்கியவர் சிவராம்

தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கான சர்வதேச நாடுகளின் ஆதரவை மாமனிதர் சிவராம் உருவாக்கியதை விரும்பாத சக்திகளே அவரைப் படுகொலை செய்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி. குற்றம்சாட்டினார்.

நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாமனிதர் சிவராமின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றிய போதே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் பொதுத் தேர்தல் தொடர்பாக மட்டக்களப்பில் நடைபெற்ற கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிவராம், நாடு முழுவதும் பரந்து வாழும் தமிழ் வேட்பாளர்களை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் வாக்குகளை சிதறவிடாமல் ஒன்றுசேரப் பெற்றுக்கொண்டால், தமிழ்த்தேசியத்தை ஒருமித்த குரலில் வெளிப்படுத்த முடியும் என்றார்.

அதன் பின்னரே இந்தக் கருத்து பரிசீலிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இன்று ஒரு பலம் வாய்ந்த அரசியல் கட்சியாகத் திகழ்கின்றது.

மாமனிதர் சிவராம் படுகொலையினை மேற்கொண்டவர்கள் இராணுவ புலனாய்வுத் துறையினருடன் இணைந்து செயல்படும் தமிழ் ஆயுதக்குழுக்களே. அக்கொலையினை அவர்கள் மேற்கொள்வதற்கான காரணம் தமிழ்த் தேசியக் கருத்துக்களை இலகுவில் சர்வதேசத்தின் மத்தியில் கொண்டு செல்ல வல்லவர் சிவராம். அவரது கருத்துப் பரிமாற்றம் மூலம் தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவு அதிகரிக்கும் என்பதாலே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

மாமனிதர் சிவராம் வாய் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டு அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் போடப்பட்டமையானது 22 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் வாயைத் திறக்கக் கூடாது என்ற அச்சுறுத்தலை விடுப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகத்தான் கருதுகிறேன் என்றார். (ந-4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"வில்லூன்றி இந்து மயானத்திற்கான நிர்வாகசபை ஒன்றைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு, கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலயத்தில், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த மயானத்தினுடைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இவ்வாறான நிர்வாகக் குழு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆதலால், இம் மயானத்தில் தகனக் கிரியைகளை மேற்கொள்கின்ற பிரதேச மக்களை இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ந)

# பௌத்த போதனை செய்பவர் யுத்தப் பிரகடனம் செய்வதா?

(கொழும்பு)

பௌத்த போதனைகளை செய்ய வேண்டிய ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் யுத்த பிரகடனம் செய்வதா என்று இலங்கை அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அத்துரலிய ரத்ன தேரர் செவ்வாயன்று விசேட உரை நிகழ்த்துகையில், சிங்களப் பேரினவாதத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தும் வகையில் கருத்துகளைத் தெரிவித்தார்.

அத்துரலிய ரத்ன தேரர் இந்த விசேட உரைய்ய நிகழ்த்துகையில், ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான மேர்வின் சில்வா அவரை உரை நிகழ்த்த விடாது பல தடங்கல்களை ஏற்படுத்தினார்.

பௌத்த போதனை செய்ய வேண்டியவர் யுத்தப் பிரகடனம் செய்கிறார். அவர் பௌத்த மதத்திற்கே ஒரு அவமானச் சின்னம் எனவும் ஜனாதிபதியினை அசௌகரியப்படுத்திவிட்டார்கள். உங்களுக்கு எதற்கு காவியுடை. நீங்கள் தேரர் அல்ல. சாதாரண நபர் எனவும் அவர் கூச்சலிட்டார்.

இக் குழப்பங்களுக்கு மத்தியில் ரத்ன தேரர் பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இரண்டு பில்லியன் டொலருக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தான் நிகழ்த்திய உரை இலங்கைக்கு அபகீர்த்தியை உண்டாக்கியிருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம குறிப்பிட்டாலும் தான் செய்தது அகிம்சை வழியில் தர்மத்திற்கு உட்பட்டு இந்நாட்டு சிங்களவர்களின் குரலை உலக றியச் செய்தது மட்டுமே.

இந்தச் சம்பவம் நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுவார்களாயின் அன்று சுமங்கல தேரர் ஆங்கிலேயரின் கொடியை கீழிறக்கி அரச உற்சவம் ஒன்றை குழப்பியமையையும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒரு செயல் என இவர்கள் கூறக்கூடும்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பிற்குச் செல்லுமாறு இலங்கையை வலியுறுத்தும் அமெரிக்கா, ஈராக்கின் அல்சார்காம் உடனே ஆப்கானிஸ்தானின் முல்லா உமருடனோ பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தாதது ஏன்? எனக் கேள்வி எழுப்பினார்.

பொதுக்கட்டமைப்பு என்ற போர்வையில் வட-கிழக்கில் 10 கிலோமீற்றர் தூரத்தை கடற்புலிகளின் தளபதி சூசையிடம் கையளிக்க அரசாங்கத்திற்கு இருக்கும் உரிமை என்ன?

இந்தப் பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திட்டு நாட்டினை பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளிடம் தாரை வார்க்க அரசு அனுமதித்தாலும் நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு இந்த அரசாங்கத்தினால் நிவாரணங்களை வழங்க முடியவில்லை.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முடியாத அரசாங்கம் சர்வதேசப் பிரஜைகள் முன்னிலையில் தலை குனிந்து இருந்து பிச்சை கேட்கின்றது. நிதியினைப் பெற்று விடுதலைப் புலிகளுக்கு தாரைவார்க்கவோ அரசு இவ்வாறு செய்கிறது.

மக்கள் கருத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எதிராக அரசாங்கம் சென்று விடுதலைப் புலிகளுடன் கூட்டு ஆட்சியை ஏற்படுத்த முயலுமாக இருந்தால் அதனைத் தோற்கடிக்க அஹிம்சை வழியில் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் சிங்களவர்கள் எடுப்பார்கள் அது உறுதி எனவும் குறிப்பிட்டார்.

ரத்ன தேரரின் உரையினை அடுத்து எழுந்து நின்று உரை நிகழ்த்திய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, தேரரின் கருத்துக்கள் அனைத்தையும் நிராகரிப்பதாகவும் அது தொடர்பான அதிருப்தியை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார். (ந-4)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க

# வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்க மாகாணக்கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் அரசாங்க பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்தி சங்க வங்கிக் கணக்குகளை பரிசோதிக்கும் நடவடிக்கையொன்றை மாகாணக் கல்வியமைச்சு ஆரம்பித்துள்ளது.

பாடசாலை வங்கிக் கணக்குகள் உரியமுறையில் நிர்வகிக்கப்படாமை பல்வேறு ஊழல்கள், நிதி துஷ்பிரயோக நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அதிபராக செயற்பட்டுவரும் அதிபர்கள் தமது சொந்த வேலைகளுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்க வங்கிக் கணக்கையும் காசோலைகளையும் பயன்படுத்தி வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் மாகாணக் கல்வியமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்க வங்கிக் கணக்குகளை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவற்றின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலை அமைந்துள்ள வலயக் கணக்காளரினால் வங்கிக் கணக்குகள் மேற்பார்வை செய்யப்படுவதுடன் அவதானிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக மாகாணக் கல்வியமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேலும் வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளது. (க-9)

# மின்சாரசபை மறுசீரமைப்பு விவகாரம்; தொழிற்சங்கங்கள் மாற்று யோசனை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான அமைச்சரவை அறிக்கைக்கு மாற்றாக இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்களினால் புதிய யோசனைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் முன்வைக்கப்பட்ட 9 நிறுவனங்களுக்குப் பதிலாக 3 நிர்வாகப் பிரிவுகளை இத்தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன.

தாங்கள் புதிய யோசனைகள் அடங்கிய திட்டங்களை தற்போது தயாரித்து வருவதாகவும் அனேகமாக விரைவில் அவை பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என நம்புவதாகவும் மின்சாரசபை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையினால் வருடம் தோறும் 90 பில்லியன் நட்டம் ஏற்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், இந்த இழப்புக்களை ஈடுசெய்யும் வகையில் நாம் மின் உற்பத்தி, மின் கடத்தல், மின் விநியோகம் என 3 பிரிவுகளை நிறுவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அந்த 3 பிரிவுகளும் சுயாதீனமாக இயங்கும். அவை தனியார் நிறுவனங்களாகவோ அரசாங்கத்தின் சபையாகவோ இயங்காது எனவும் இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கப் பொதுச் செயலாளரும் புதிய யோசனைகளைத் தயாரிப்பதற்கான குழுவின் உறுப்பினருமான ரன்ஜன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

மின்சாரசபையை மறுசீரமைப்பது சம்பந்தமாக மின்சாரசபை தொழிற்சங்கங்கள், சட்டமா அதிபர் திணைக்களம், மின்சக்தி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு புதிய யோசனைகளை தயாரிப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான அமைச்சரவை அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியதையடுத்து அந்த அறிக்கை திரும்பப் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# ஆழிப்பேரலை எச்சரிக்கை குறித்து கவாய் மத்திய நிலையம் அறிவிக்கும்

(கொழும்பு)

ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம் அமைக்கப்படும் வரை தாம் ஆழிப்பேரலை தொடர்பில் இலங்கைக்கு தகவல்களை வழங்க தயார் என கவாய் ஆழிப்பேரலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஆழிப்பேரலை தொடர்பான தேசிய குழுவின் தலைவரான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை தொடர்பாக கவாய் மத்திய நிலையம் முன்கூட்டியே எச்சரிக்கையை இலங்கை காலநிலை அவதான நிலையத்துக்கு அறிவிக்கவில்லை என்பதை அந்த மத்திய நிலையம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அபாயம் குறித்து கவாய் மத்திய நிலையம் இலங்கையின் காலநிலை அவதான நிலையத்துக்கு அறிவித்த போதிலும் காலநிலை அவதான நிலையம் அது தொடர்பில் கவலையீனமாக இருந்ததாகக குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் காலநிலை அவதான நிலையத்துடன் தொடர்பு கொள்வதற்கான எந்தவித தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளவில்லையென்பதை கவாய் மத்திய நிலையம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (க-9)

# கோப்பாய் கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளிடையேயான கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

### ஆக்கம் – எழுத்து

**பிரிவு I**

1ஆம் இடம்:- வே.பிரதீபா, உரும்பிராய் சந்திரோதய வித்தி. 2ஆம் இடம்:- ம.மயூரவாணி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. 3ஆம இடம்- யோபிரியா, ஊரெழு கணேசா வித்தி.

### கட்டுரை வரைதல் கடிதம் எழுதுதல்

**பிரிவு II**

1ஆம் இடம்:- த.ஜதுலா, நடராஜா இராமலிங்க வித்தி. 2ஆம் இடம்:- தி.கஜந்தி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி. 3ஆம் இடம்:- யோ.ஜோனித்தியா, உரும்பிராய் இந்துக் கல்லூரி.

**பிரிவு III**

1ஆம் இடம்- கு.நிசாந்தி, அத்தியார் இந்துக் கல்லூரி. 2ஆம் இடம்:- கு.தமிழினி, ஆவரங்கால் மகாஜன வித்தி. 3ஆம் இடம்- ஜெ.குமுதா, ஊரெழு கணேச வித்தி.

### கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்

**பிரிவு IV**

1ஆம் இடம்:- உ.குகாயினி, சோமஸ்கந்தா கல்லூரி. 2ஆம் இடம்:- ப.துளசி, உரும்பிராய் சைவத் தமிழ். 3ஆம் இடம்:- பா.தர்சன், இடைக்காடு மகாவித்தி.

### தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்

**பிரிவு V**

1ஆம் இடம்:- பா.யதுப்பிரியா, அச்சுவேலி மத்திய கல்லூரி. 2ஆம்இடம்:- க.வினோதினி, இடைக்காடு மகாவித்தி. 3ஆம் இடம்:- பூ.இராஜ் வினோத், அத்தியார் இந்துக் கல்லூரி.

### இலக்கணப் போட்டி

**பிரிவு VI**

1ஆம் இடம்- ம.ஜெயமேரி, புனித திரேசாள மகளிர் கல்லூரி. 2ஆம் இடம்- சி.ஜனார்த்தனி, வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி. 3ஆம் இடம்- தி.லக்ஸனா, அத்தியார் இந்துக் கல்லூரி.

**பிரிவு V**

1ஆம் இடம்:- த.கஜேந்திரன், கிறிஸ்தவக் கல்லூரி. 2ஆம் இடம்:- தி.கல்பனா, அச்சுவேலி மத்திய கல்லூரி. 3ஆம் இடம்:- ஆ.டர்சிகா, அத்தியார் இந்துக் கல்லூரி.

### குறுநாடக ஆக்கம்

**பிரிவு VI**

1ஆம் இடம்- தசிவதர்சனா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி. 2ஆம் இடம்:- சி.சுகந்தினி, கிறிஸ்தவக் கல்லூரி. 3ஆம் இடம்:- கி.மயூரகிரி அத்தியார் இந்துக் கல்லூரி.

**பிரிவு V**

1ஆம் இடம்:- து.தசோனியா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி. 2ஆம் இடம்- டி.பௌசிகா, கிறிஸ்தவ கல்லூரி. 3ஆம் இடம்:- ம.பிரதீபா அத்தியார் இந்துக்கல்லூரி.

### கவிதை ஆக்கம்

**பிரிவு IV**

1ஆம் இடம்:- அ.முருகதாஸ், கோப்பாய் மகா வித்தி. 2ஆம் இடம- ரா.அச்சிகா சோமஸ்கந்தா கல்லூரி. 3ஆம் இடம:- செ.ஜசித்தா, அச்சுவேலி மத்திய கல்லூரி.

**பிரிவு V**

1ஆம் இடம்:- ம.வானதி, சோமஸ்கந்தா கல்லூரி. 2ஆம் இடம்:- ஜே.கலைவாணி, கிறிஸதவக கல்லூரி. 3ஆம் இடம்;- இ.மயூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

### சிறுகதை ஆக்கம்

**பிரிவு IV**

1ஆம் இடம்:- சோ.ஜெய்தேவி, கிறிஸதவ கல்லூரி. 2ஆம் இடம்:- மி.கலித்தன் விஜித்தா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி. 3ஆம் இடம்:- த.சத்தியலதா ஊரெழு கணேச வித்தி.

**பிரிவு V**

1ஆம் இடம்:- இ.துஷ்யந்தினி, கிறிஸ்தவ கல்லூரி. 2ஆம் இடம்:- ர.சோபிகா, அத்தியார் இந்துக் கல்லூரி. 3ஆம் இடம்:- பி.அகலியா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி. (ந-79)

# மலேசியாவிலும் தமிழர்கள் சித்திரவதைக்குள்ளாகும் நிலை

(லண்டன்)

மலேசியாவுக்கு வேலைக்குச் செல்லும் தமிழர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வறுமை காரணமாக மலேசியாவுக்கு வேலைக்குச் செல்லும் தமிழர்களுக்கு அங்கு உரிய சம்பளம், உணவு என்பன வழங்கப்படுவதில்லை. அதுமட்டுமன்றி, அவர்கள் பல்வேறு வகையான சித்திரவதைகளுக்கும் ஆளாகினறனர் என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக, சென்னையைச் சேர்ந்த தமிழர்களே இவ்வாறான சித்திரவதைக்குள்ளாகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களும் இவவாறான சித்திரவதைக்குள்ளாகி வருகினறதாகவும, தற்போது இச் சித்திரவதைச் சம்பவங்கள் தென்கிழக்காசிய நாடுகளிலும் இடம் பெறத் தொடங்கியுள்ளதாகவும் இந்திய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

# சமுர்த்தி திட்டத்தில் புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

சமுர்த்தி திட்டத்தில் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.0 வீதமானவர்கள் சமுர்த்தி திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளதுடன் வருமானம் குறைந்த 18 இலட்சம் குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தில் உறுப்புரிமையும் பெற்றுள்ளன.

50 ஆயிரம் சமுர்த்தி கிராமிய சபைகளும், இரண்டரை இலட்சம் சமுர்த்தி குழுக்களும், ஆயிரத்து 35 சமுர்த்தி வங்கிகளும் இங்கு இயங்குகின்றன.

சமுர்த்தி திட்டத்திற்கு அரசாங்கம் வருடாந்தம் 12 பில்லியன் ரூபாவை ஒதுக்குகின்றது.

சமுர்த்தி வங்கிகளில் தற்போது 12 பில்லியன் ரூபா சேமிப்பாக உள்ளது.

எனவே சமுர்த்தி திட்டப் பணிகளை துரிதப்படுத்தி மக்களுக்கு விரைவாக சேவைகளை வழங்கும் நோக்கிலேயே இத்திட்டத்தில் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ள இவ் விழாவில் 20ஆம் திகதி கைலைக் காட்சியும், சப்பறமும், 21ஆம் திகதி தேர் உற்சவமும், 22ஆம் திகதி தீர்த்தமும் அதனைத் தொடர்ந்து 23ஆம் திகதி இறுதித் திருவிழாவான தெப்பத்திருவிழாவும் (பூங்காவனம்) நடைபெறவுள்ளது. (க-5)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் அழகியற் கல்வி பாடத்திற்கான கடமை பார்க்கும் உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்குறைந்தது உரிய பாடத்துறையில் ஆசிரியா பயிற்சியை முடித்த இலங்கை ஆசிரியா சேவை வகுப்பு 1, வகுப்பு 2:1, வகுப்பு 2:11 ஐச் சேர்ந்த பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணபப்படிவங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் உரியமுறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு. அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வேறு வலயத்தைச் சேர்ந்தவர்கள் இப் பதவிக்காக விண்ணப்பிக்க விரும்பின் தத்தமது வலயக்கல்விப் பணிப்பாளரூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)

# எருதுமாடு மோதியதால் பெண் நினைவிழந்தார்

மேய்ச்சலுக்காகக கட்டப்பட்டிருந்த எருது மாடு வயல் வேலையில் ஈடுபட்டிருந்த பெண்ணை மூர்க்கத்தனமாக இடித்துத் தாக்கியதில் அபபெண் அவ்விடத்திலே சுயநினைவிழந்தார்.

கடந்த வாரம் பொன்னாலையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கணபதிப்பிள்ளை சரஸ்வதி என்பவரே இவ்வாறு எருதுமாட்டால் தாக்குண்டு உடல் உடகாயங்களிற்கு உட்படடவராவார். இவர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். (க-7-21)

# இசை நாடகம்

(கற்கோவளம்)

கற்கோவளம் கும்பி முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்கோவளம் வசந்தகான சபா இசை நாடக மன்றத்தினரால் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்னும் இசை நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (க-7-104)

# கட்டாக்காலிகளால் தொல்லை அதிகரிப்பு

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை, அராலி, மூளாய் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் அநாதரவாகத் திரியும் கட்டாக்காலி நாய்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் - வீதியில் பயணிப்பவர்களையும- பாடசாலை மாணவர்களையும் இக்கட்டாக்காலி நாய்கள் துரத்தியும் - கடித்தும் வருகின்றன.

இக்கட்டாக்காலி நாய்களை அழிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுள்ளனர். (க-49)

# கண்டெடுக்கப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த கந்தசாமி இராசம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை, இலங்கை வங்கி க/கு புததகம் மற்றும் பிற ஆவணங்களுமசாவகச சேரி டச்சு வீதியில் உள்ள பழனி ஆண்டவர் கோயில் அருகே ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆவணங்களைத் தொலைத்தவர் சாவகச்சேரி நகரசபை சுகாதாரப்பிரிவில் அப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-7)

# மரவேலைப் பயிற்சி

(பொன்னாலை)

வலி -தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இம்மரவேலைப் பயிற்சிக்குரிய காலம் ஒரு வருடமாகும். பயிற்சியின் போது ஊக்குவிப்புப் படியாக நாளொன்றுக்கு 50ரூபா வழங்கப்படும். அதேவேளை அவர்களது உற்பத்தியின் இலாபத்திலும் 80 சதவீதம் அவர்களுக்கு வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெறவிரும்பும் 18-30 வயதுக்குட்பட்டவர்கள் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணபப்படிவங்களை வலிகாமம் தெறகுப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-7-49)

# மூவின சமூகங்களுக்குமான சமாதான வீடமைப்புத் திட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மூவின சமூகங்களுக்குமான மூன்று சமாதான வீடமைப்புத் திட்டம் அமைப்பதற்கான ஒப்பந்தம வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு கல்வி மற்றும நீர்ப்பாசன அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை அமைச்சில இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஒஸ்ரியா நாட்டின் கூரியர் பத்திரிகை வாசகர்களால் சேகரிக்கப்பட்ட நிதியுதவியுடன் சர்வோதய இயக்கமும் இணைந்து முன்னெடுக்கவுளள இவ் வீடமைப்புத்திட்டம் நிந்தவூர், அட்டப்பளம், மட்டக்களப்பில் வட்டுவான், திருமலையில் சமுத்திரகம ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன.

நிந்தவூர், அட்டப்பளம் எனுமிடத்தில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத்திட்டத்திற்கென தனியாரின் 16.5 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டு அதில் 250 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடி வீட்டுத்திட்டமும், சமூகநிலையம், தொழிற்பயிற்சி நிலையம், பள்ளிவாசல், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் என்பனவும் அமைக்கப்படவுள்ளன.

இவைகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் நாளை வெள்ளிக்கழமை இடம்பெறவுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாறறிய அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஒஸ்ரியா "கூரியர்" பத்திரிகை வாசகர்களால் சேகரிக்கப்பட்ட நிதி சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு சென்றடைவதற்கு உதவியோருக்கு நன்றியைத தெரிவித்துக் கொண்டார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இந்நிகழ்வில் கூரியர் எயிட் திட்டத்தின் ஒஸ்ரியா பிரதிநிதி கிறிஸ்ரோபர் ரெம்ர், வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மல்லிகா கருணா ரத்ன, சர்வோதய பணிப்பாளா உதனி மெண்டிஸ ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-5)

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில்

# அரசு - புலிகளுக்கு பிரதிநிதிகள் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கடந்த மூன்று வருடங்களாக கடைப்பிடித்துவரும் யுத்த நிறுத்தத்தை கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் வரவேற்றுள்ளதாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படுவதுடன் யுத்தமொன்று எதிர்காலத்தில் ஏற்படாத வண்ணம் அவற்றுக்கு முடிவுகாணும் பொருட்டு எடுக்கப்பட்டுவரும் சகல முயற்சிகளும் வரவேற்கக்கூடிய விடயம்.

நீண்டகாலம் யுத்தத்தின் பிடியிலிருந்த இலங்கை மக்களுக்கும் இது ஆறுதல் அளிக்கக்கூடியது என்றும் அவர்கள் கூறியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், சிறுவர்கள் தொடர்பாக தேசிய திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளையும் அவர்கள் பாராட்டியுள்ளனர். (ந-8)

# வாள்களுடன் திரிந்தவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள நாரந்தனைக் கிராமத்தில் வாள்களுடன் திரிந்த இளைஞர்களை ஊர்காவற்றுறைப் பிரதேச கலாசாரம் பேணும் குழுவினர் கடந்த திங்கட்கிழமை மடக்கிப்பிடித்தனர்.

இப்பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக இவ் இளைஞர்கள் வாள்களுடன் திரிந்தமையினால் மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர்.

தற்போது இளைஞர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டதை அடுத்து மக்கள் மத்தியில் அச்சம் தணிந்துள்ளது. (க-126)

# புதிய மணிக்கோபுரம்

(பொன்னாலை)

அராலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக மணிக்கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இம் மணிக்கோபுர வேலைகள் யாவும் முற்றுப்பெற்ற நிலையில் இக்கோபுரத்தில் பொருத்துவதற்கான பெரிய காண்டாமணி இலண்டனில் இருந்து எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அராலியைச் சேர்ந்த இலண்டனில் வசித்து வரும் அடியார் ஒருவரே இம்மணியை எடுத்து வரவுள்ளார். (க-7-49)

# கொட்டுக்கடப்பு

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அனைவரும் அமைதியாக தியானத்தில் பங்குகொண்டனர். அவர்களின் மனங்கள் பூரணத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து இருக்கவேண்டும். முதியவா அமா்நதாா. அனைவரும ருசித்து உணவை உண்ண ஆரம்பித்தனா். பொறுப்பாளர் புகைப்படக்காரர் ஒருவருடன் வந்தார். யாவரும் உணவு உட்கொள்ளும் காட்சி புகைப்படம் பிடிக்கப்பட்டது.

"இரண்டு கொப்பி தாரும். பூரணத்தின் மகன் சுவிஸிலை. அவருக்கு ஒரு கொப்பி அனுப்ப வேணும்".

சிலா் ஒருவரை ஒருவா் பாா்த்துக் கொண்டனர். ஏனெனில் அவா்களில் சிலரின் பிள்ளைகள் வெளிநாட்டிலை. இந்தளவுக்காயினும் அவா்கள் செய்வாா்களா? தங்களைத் தாங்களே வினாவுவது போன்று தோன்றியது.

அன்னம் கை கழுவி மண்டபத்தே தனது கட்டிலை நோக்கி நகர்கிறாள். தன்னிடம் இருந்த பனையோலை விசிறியை எடுத்து விசிறிக் கொள்கிறாள். என்ன இருந்தாலும் குளவெட்டையிலை இருந்து எந்தநேரமும் வீசும் காற்றுக்கு ஈடாகுமே! மனம் வினாவுடன் பின்னோக்கியது.

"மாமி, மகனை வெளியிலை அனுப்பவேணும். இஞ்சை நாட்டு நிலைமையும் வரவர சரியில்லை. எல்லா வளந்த பெடியளும் போய்க கொண்டு இருக்குதுகள் அது தான்....." இழுத்தபடி அன்னத்தின் முன் சின்னத்தங்கச்சி நின்றிருந்தாள். என்ன கூற வருகிறாள் எனும் வினாவுடன அவளை ஏறிட்டாள் அன்னம்.

"உங்களிட்டை இருக்கிற நகையளை தந்தியள் எண்டால் சேர்த்து வித்துப்போட்டு ஏஜென்சிக்குக் காசு கட்டலாம்" சின்னத்தங்கச்சி முடித்தவுடன் அன்னத்திடம் இருந்து பதில் உடன் வநதது. "எனக்கேன் பிள்ளை நகையளை. எப்ப எண்டு சொல்லு தாறன. என்ரை பேரிலை உள்ள இந்தப் பனைவடலிக் காணி பத்துப் பரபபையும் உங்கடை பேருக்கே எழுதிவிடுறன். உங்களோடை தானே இருக்கிறன், இருக்கவும் போறன். வேறை யாருக்கு இதுகளெல்லாம். எப்ப எண்டாலும் உங்களுக்குத்தானே!"

அன்னத்தின் பதிலால் சின்னத்தங்கச்சியின் முகம் மலா்ந்தது. அன்னத்தின் கைகள் ஓலை முறிநது கிடுகாக்கி விற்ற காசாலும் தனக்கென வளர்த்த கோழிகள் இட்ட முட்டைகள் விற்ற காசும் சிறுகச் சிறுக சேமித்து உருவாக்கிய நகைகள் அவை. பத்துப் பரப்புக் காணியும் தகப்பன் வழி முதுசம். இன்னுமென்ன அவளுக்கென்று ஒரு சூட்கேஸ் நிரம்பிய உடுபிடவைகள். அவளது செல்வங்கள் ஆடு, மாடுகள். தனது இறுதிக்காலம் அவா்களுடன் எனற நம்பிக்கை, இவையனைத்தும் மனப்பூா்வமான ஒப்படைப்பு.

காலம உருண்டது. இப்போதெல்லாம் முன்பு மாதிரியில்லை. மாலையானதுமே ஊரடங்கி விடுவதும, இடப்பெயா்வும் வழக்கமாகிவிட்ட விடயங்கள். சண்டை வலுத்தால் சின்னத்தங்கச்சி குடும்பம் பாதுகாப்பான இடங்களுக்கு செனறு விடுவார்கள். சணடை ஓய திரும்ப வருவார்கள். அன்னம் தான் வீட்டுக்காவல். நாய் மாடுகளுக்கு கவனிப்பாளா். அன்றொரு நாள் விடிகாலையிலேயே வெடிச் சதததங்கள் கேட்கத் தொடங்கி விட்டன. கிராமமே ஓரிருவரைத் தவிர இடம்பெயரத் தொடங்கி விட்டது. இடம்பெயரா அந்த ஓரிருவரில் அன்னமும் ஒருத்தி. படிப படியாக மிக அண்மையாக ஷெலகள் வந்து வீழ்ந்து பெரும் ஓசையுடன் வெடிக்கத் தொடங்கின. அன்னமும் செல்லாதிருந்த ஒரு சிலரும் 'கோவில்லை போயிருப்பம்' என வீதி ஓரத்தே இருந்த கோவிலுக்குச் செல்கிறார்கள். அங்கு நிலமை மோசமடையவே அருகமைந்த கிராமத்துக்குச் செல்கிறார்கள். அங்கு இரவு கழி கிறது. வந்தவர்கள் கிடைத்த உணவை அன்னத்துடன் பகிா்ந்து கொள்கிறார்கள். மறுநாள் காலை சிறிது சத்தங்கள் ஓய்கின்றன. சின்னத்தங்கச்சியின் இளையவன அங்கு சைக்கிளில் வருகிறான்.

"ஆச்சி, நீங்கள் இஞைசை இருக்கிறியளே, நல்ல காலம். இனி ஒருதரும் அங்காலை போகேலாதாம்! அம்மா பார்த்து வரச் சொன்னவ. நாங்கள் ஒரு மாமா வீட்டிலை தற்சமயம் இருக்கிறம். கவனமாய இருங்கோ! ஐயா இவவையும் பாா்த்துக் கொள்ளுங்கோ!" பதிலுக்குக் காத்திராத இளையவனின் சயிக்கிள் திரும்பிப் பறக்கிறது.

"ஆரை ஆர் பார்க்கிற தெண்டு தெரியாமல் கிடக்குது. இனி என்ன நடக்குமோ, எங்கை போறதோ! அவையோடை நீ போகேலாதோ!" அருகிருந்தவரின குரல் அன்னத்தை உசுப்புகிறது.

"அவையே ஆற்றையோ வீட்டிலை இருக்கினமாம். அங்கையெண்டாலும் பாதுகாப்பா இருக்கட்டும். நான் தனியன்தானே, சமாளிப்பம்"

முதுமையிலும் அன்னம் விட்டுக்கொடாது பேசினாள். நாட்கள நகா்கின்றன. முகாம் வாழ்க்கை. வந்த நிவாரணத்தை அருகிருந்தவா்களிடம் கொடுத்து உணவைப் பெற்றுகொண்டாள் அன்னம். ஏதோ ஒரு சங்கம் மாற்று உடுப்புக்கள் வழங்கியிருந்தது. மக்களின் வேறு இடங்களை நோக்கிய பயணம், எங்கே செல்கிறார்கள்? எங்கு இது நிற்கும்? திசை தெரியாத பயணம்.

சின்னத்தங்கச்சி பல மைல்களுக்கப்பால் சண்டை இல்லாத இடத்தில் குடும்பத்துடன் இருக்கிறாள். தற்செயலாக ஒருநாள் சமூகசேவையில் ஈடுபடும் ஊர் இளைஞன் ஒருவன் சின்னத்தங்கச்சியைக் கண்டுவிட்டான்.

"என்ன சின்னக்கா எங்கை இருக்கிறியள்...?"

"இதிலை கிட்டத்தான். இடம்




பரவாயில்லை. இருக்கிறம்"

"அன்னம் ஆச்சி அங்கை முகாமிலை இருக்கிறா, பாவம் கஸ்ரப்படுறா ஏன் அவவைக் கூட்டி வரேல்லை"

"நாங்களே கஸ்டம் தம்பி. பிறகு அவவை எங்கை வைத்திருக்கிறது"

"என்ன என்டாலும் அவவை அப்படி நீங்கள் விட்டிருக்கக் கூடாது"

"அவவை இஞ்சை இருக்கிற இல்லத்திலை எண்டாலும் சேர்த்துவிட வேணும்"

"யார் தம்பி உதை பொறுப்பெடுத்து செய்யிறது"

"ஏன் நீங்கள் செய்யலாம் தானே!" வயதுக்கேற்ற தொனி அவன் வாா்த்தைகளில் தெரிக்கிறது.

"என்னவோ இவ்வளவு நாளும் வைச்சுப் பார்த்திட்டம். இவ்வளவுதான் எங்களாலை ஏலும்" சினனத்தங்கச்சியின் குரல் பேச்சை முடிக்கிறது.

"யார் யாரைப் பார்த்தது? யாருக்கு யார் உதவியாக இருந்தது" இடம்பெயா்ந்த நாய் ஒன்று உச்சஸ்தாயியில் ஊளையிட்டவாறு ஓடுகிறது. அந்த இளைஞனின் முயற்சி அன்னத்தை இந்த இல்ல அங்கத்தவா் ஆக்கிவிட்டிருந்தது. தோழமையுடன் கூடிய முதுமைத்தோழிகள், கலகலப்பான கவலையில்லா இல்லம், ஆண்டன் அமைத்துத் தந்த இறுதி இடம். அன்னத்தின் நாசியில் இருந்து மூச்சொன்று கிளம்பி காற்றுடன் கலக்கிறது.

அருகிருந்த முருகன் கோவிலில் இருந்து கந்தசஷ்டி கவச பாடல் விடிகாலை ஐந்து மணியாகிவிட்டதை உணர்த்துகிறது. பறவைகள் தங்கள் தேடல்களுக்காக வழக்கமான சுறுசுறுப்புடன் புறப்படத் தொடங்கியிருந்தன.

அன்னம் கட்டிலில் நிமிா்ந்து இருந்து ஒருமுறை கைகளை உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டாள். அவளுக்கு விடிகாலையில் எழுவது என்பது பழக்கமான ஒன்று. இல்லத்தில் சிலரும் இவ்வாறு எழுந்து விடுவார்கள். அவர்களுள் தங்கம்மாக் கிழவியும் ஒருத்தி. பெயருக்கேற்ற தங்கநிறம். முதுமையிலும் மகிழ்ச்சிக் களை கொண்ட மலர்ந்த முகம், சற்றுப் பருத்த சரீரம்.

பிள்ளைகள் வெளியிலையாம். பார்க்க ஆட்களில்லை. இஞ்சை கொண்டுவந்து விட்டிட்டினம். தங்கம்மாக் கிழவியைப் பற்றி அறிந்தவை இவ்வளவு தான். வழமையில் விடிகாலையில் எழுந்து கடன்களை முடித்து நெற்றியில் நீற்றுடன் நலம் வெளிக்கையில் தன் கட்டிலில் இருந்தவாறு மெல்லிய குரலில் கீா்த்தனங்களைப் பாடும் அழகே அழகு. ஆனால் இன்று ஏனோ தங்கம்மாக்கிழவி படுக்கையிலேயே கிடந்தாள்.

தங்கம்மாவுக்கு ஏதேனும் உடம்புக்கு ஏலாதோ? அன னம் தனக்குள் வினவிக்கொண்டாள். நன்றாக வெளிச்சம் பரவி விடடது. கவனிப்பாளர் இல்ல வரண்டாவால் நடந்து வருகிறார்.

"தங்கம்மாச்சி என்னணை இணடைக்கு உனக்கு விடிஞ்சது தொியாமல் நல்ல நித்திரை அடிக கிறாய்" அன்பாகக் கூறியபடி கவனிப்பாளா் தங்கம்மாக் கிழவியின் கட்டிலருகே செல்கிறார். அவளிடம் இருந்து எதுவித பதிலும் இல்லை. நிலைமையின் அசாதாரணத்தை உணா்ந்து கவனிப்பாளா உசாரடைகிறா். அவளைத் தட்டி எழுப்பிப் பார்க்கிறார். அவளின் உயிரற்ற உடல்தானே கிடக்கிறது. செய்தி இல்லத்தே பரவுகிறது. பொறுப்பாளர் வைத்தியருடன் வருகிறார். தங்கம்மாக் கிழவியின் இறப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. "நடக்க வேண்டியதைக் கவனிப்பம்" கூறியபடி நகர்கிறார் பொறுப்பாளர்.

தங்கம்மாக் கிழவியின் உடல் குளிப்பாட்டப்பட்டு வெணணுடையில் பிரார்த்தனை மண்டபத்தே கிடததப்பட்டு குத்துவிளக்கொன்று தலைமாட்டில் எரிகிறது. முதியவள் ஒருத்தி தானே தொடுத்த மலா்மாலையை உடலுக்கு அணிவிக்கிறாள். கூடியிருந்த பலரின் கண்களில் நீா் குளமாகி இருந்தது.

**முகமாலை சேகர்**

"தங்கம்மா ஆச்சிக்கு தனது கடைசி ஆசை தான் போன பிறகு தனது உடலை பல்கலைக்கழக கல்விக்காக மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்க வேணும் என்பது" பொறுப்பாளர் அமைதியைக் குலைத்தவாறு பேசினார்.

"பெயருக்கேற்ற குணமும் தங்கம்தான் தங்கம்மாச்சிக்கு" ஒருவா் கூறுவது கேட்கிறது.

"பாரோடு விண்ணாய் பரந்த எம்பரனே! பற்று நான் மற்றிலேன் கண்டாய்" என முதியவா் நெஞ்சுருகிப் பாடுகிறார்.

தங்கம்மாக் கிழவிக்கு விடுதலை. தனித்தே வந்தோம் தனித்தே போகிறோம். என அவளது உடல் அமைதியாகக் கிடக்கிறது.

அன்னத்தின் கண்களில் இருந்து நீா் பெருகி கன்னத்தில் வழிகிறது. 'தங்கம்மா போயிட்டா! எனது உடல் கொட்டில் இருந்து இந்த உயிர் எப்போது அகலும்' அன்னத்திடம் திரண்ட சிந்தனை ஏக்கமாக நெஞ்சை நிறைக்கிறது. மருத்துவபீட வாகனம் வாசலில் வந்து நிற்கிறது. □

# பொதுக்கட்டமைப்பு விரைவில்!

## புலிகளிடம் நோர்வே உறுதி

(கொழும்பு)

சுனாமி நிவாரணத்துக்கான உத்தேச பொதுக்கட்டமைப்பு விரைவில் அமைக்கப்படும் என்று விடுதலைப்புலிகளிடம் நோர்வே உறுதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பியின் கடும் எதிர்ப்பு காரணமாக பொதுக்கட்டமைப்பு இன்னமும் சாத்தியமாகவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய நோர்வேயின் தூதுவர் ஹன்ஸ பிரட்ஸகர் பொதுக்கட்டமைப்பானது விரைவில் உருவாக்கப்படும் என உறுதயளித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோல் கடந்த சனிக்கிழமை தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியும் பொதுக்கட்டமைப்பு உருவாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் கையொபபமிட விடுதலைப்புலிகள் தயாராக வுள்ளதாகவும், நோர்வேயின் யோசனைகளின்படி பொதுக்கட்டமைப்பு அமையவேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் இவர்கள் இருவரிடமும் எடுத்துக் கூறியுள்ளதாகவும் தெரிவிககப்படுகின்றது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கண்டியில் நடைபெற்ற வேளை இத்தகைய உறுதிமொழியினை நோர்வே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# யுனிசெவ் உதவி

(பொன்னாலை)

வலி-தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 30 மலசலகூடங்களையும் இரண்டு பொதுக்கிணறுகளையும் அமைத்துக் கொடுப்பதறகு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான தகுந்த பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணிகள் கிராமசேவையாளர்கள் மூலமாக தற்போது நடைபெறுகின்றன.

பெண்களைத் தலைவர்களாகக கொண்ட விதவைக் குடும்பங்கள், அதிக குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள், நோய்வாய்ப்பட்டு வறுமையால் வாடும் குடும்பங்கள் தெரிவுசெய்யபபட்டு அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையல் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

(க-7-49)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 53



இதைக்கேட்ட படுகை முதலியார் "ஓ! நேற்று வாரியார் சுவாமிகள் மிகவும் சிறப்பித்துச் சொல்லிய செந்தமிழ்ப் புலவர் இவர்தனா? புலவருக்கு உதவுவது தானே புண்ணியம்! பணம் வேண்டாம். தங்களுக்கு அரிசிதர நான் தவம்செய்திருக்க வேண்டும்!" என்றுகூறி ஒரு மூட்டைப் பச்சரிசியை நாங்கள் இருக்குமிடத்திற்கு இனாமாக அனுப்பினார்.

அதனால் நீங்கள் ஒருவார்த்தை என்னைப்பற்றி சொன்னதற்கு ஒரு மூட்டை அரிசி எனக்குக் கிடைத்தது. ஆகவே "நீகு ஒக மாட, நாகு ஒக கூட" என்று தியாகப்பிரும்மம் கூறியது மிகவும் பொருத்தம்" என்று வியந்து கூறினார். இதனைக்கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

### நெல்லையப்பர் திருப்பணி

ஒருசமயம் திருநெல்வேலிக்குச் சென்றிருந்தேன். அங்கு அ.க. முத்தையாபிள்ளை, துணை ஆணையர் அர்ஜுனன் முதலியவர்கள் அடியேனைச் சந்தித்து, "பழமையான நெல்லையப்பர் கோயில் பழுதாக உள்ளது. 300 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் ஆனதாகத் தெரியவில்லை. தாங்கள் தலைமையேற்று திருப்பணி செய்து, மகா கும்பாபிஷேகம் புரியவேண்டும்" என்று கூறி வேண்டிக் கொண்டார்கள்.

அப்போது அடியேன் 400மைல் தொலைவில் உள்ள நாம் எப்படி இதனை ஏற்பது? என்று எண்ணி தயங்கினேன். பின்னர் திருவருள் தூண்ட இசைந்தேன்.

திருப்பணிக்கென பல விரிவுரைகள் புரிந்து அன்பர்களுடன் பல ஊர்கள் சென்று நிதி திரட்டினேன். அப்போது அறங்காவலர்களாக இருந்த ப.லட்சுமணன், நிர்வாக அதிகாரி சேவுக பாண்டியன், அ.க.முத்தையாபிள்ளை முதலிய அன்பர்கள் உடன் இருந்து உழைத்தார்கள். தளவரிசைகள், இராஜகோபுரங்கள், திருமதில்கள், மண்டபங்கள் முதலியவைகளைப் பழுது பார்த்து திருப்பணி, இனிது நிறைவேறியது.

3-5-1974 அன்று சிறந்த முறையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இத் திருப்பணிக்கு 8,60000 ரூபாய் செலவழிந்தது.

### சமயபுரம் திருப்பணி

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள சமயபுரம் மகமாயியம்மை மிகவும் புகழ்பெற்றதேவி. என்னுடைய குருநாதர் மதுரை திருப்புகழ் சுவாமியின் புதல்விக்குப் பெரியம்மை கண்டு கையெலும்பு நீங்கிவிட்டது. சுவாமிகளின் மனைவியாருடைய கனவில் மகமாயி சென்று சமயபுரம் வருக என்று கட்டளையிட்டனர். மதுரை சுவாமிகள் சமயபுரம் குடியேறி அம்பிகையின் அபிஷேக நீரைக் கையில்நனைத்துவர கை பூரண சுகம் அடைந்தது.

மதுரை சுவாமிகள் பெரிய அளவில் சமயபுரத்து அன்னைக்கு மகா கும்பாபிஷேகம் சுமார் 50 ஆண்டுகட்கு முன் செய்துவைத்தார். பல அன்பர்கள் சமயபுரம் திருப்பணிக்கு என்னைத் தலைமை பூண்டு திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் புரியுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

குருநகர் திருப்பணி செய்த கோயிலில் நாமும் செய்வது கடமைதானே என்று எண்ணி அத் திருப்பணிக்குத் தலைமை பூண்டேன். அம்பிகையின் மகிமை; உண்டியில் முயற்சியேயின்றி நிதிவந்து குவிந்தது. அம்பிகையின் ஆலயத்தைப் பழுதுபார்த்தும், அம்பாளின் திருவுருவைச் செப்பம்செய்தும், (பல இலட்சம்ரூபாய் செலவில்) மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### நெய்வேலி நிகழ்ச்சி

1969 மாசி மாதம் அரந்தாங்கி சென்று பனியில் 4 நாள் விரிவுரை புரிந்து சுரந்தாங்கி விருதை நகர் சென்றேன். அன்பர் **O.M.S.S.** சுந்தரமாகாலிங்கம் கரந்தாங்கி உதவினார். காய்ச்சலுடன் நீராடி மகா சிவராத்திரியன்று 6 கால பூசையும் சிவகாசியில் விரிவுரையும் புரிந்தேன்.

நெய்வேலியில் அருள்நெறித் திருக் கூட்டத்து அன்பர்கள் விரிவுரைக்கு அழைத்திருந்தார்கள். காய்ச்சலுடனே நெய்வேலிசென்றேன்.

முதல்நாள் திரு.கீ.ராமலிங்கனார் தலைமை வகித்தார். "விதி வலிமையுடையது. ஊழை வெல்வது அரிது. அமெரிக்காவில் இருந்து மருத்துவர் வரினும் விதியை வெல்ல முடியாது" என்று விரிவுரை புரிந்தேன்.

சில குண்டர்கள் தங்கள் தலைவரை இகழ்ந்து பேசியதாகக் கருதிக்கொண்டார்கள். மறுநாள் ஜுரம் மிகுதியாக இருந்தது. மருத்துவர் இன்று நீங்கள் விரிவுரை புரிய வேண்டாம் என்றார். அடியேன் இருப்பிடத்தில் இரவு மயங்கி படுத்து உறங்கிக்கொண்டிருந்தேன்.

இரவு மணி 12 இருக்கும். 200,300 கயவர்கள் கூடிவந்து நான் இருந்த இடத்தில் நுழைந்து ஓ என்று கதறி கலாடா செய்தார்கள். நான் வழிபடுகின்ற பூஜா மூர்த்தியைக் கீழே தள்ளினார்கள். மயில் உடைந்தது, சேதப்படுத்தினார்கள். நான் மயக்கந் தெளிந்து எழுந்தேன். இன்னதென்றே புரியவில்லை. அந்தப் புல்லர்கள் காட்டுமிராண்டிகள்போல் கத்தினார்கள்.

உடனே ஒரு காவல்துறையதிகாரி வந்து என்னை உடனே புறப்பட்டுப் போகுமாறு கூறினார். நான் சிதறியிருந்த பூஜா சாதனங்களை எடுத்துக்கொண்டு கார் ஏறி காவல்துறை அதிகாரியுடன் புறப்பட்டேன். வடலூர் **O.P.** இராமசாமி ரெட்டியார் இருக்கும் இடத்தையடைந்தேன்.

மறுநாள் அதிகாலை காரில் புறப்பட்டு திருச்சிராப்பள்ளி இராமலிங்கா நகர் என் அன்பர் **J.M.**பாலசுப்பிரமண்யம் அவர்களின் இல்லத்தையடைந்தேன். அன்று அவருடைய கிருகப்ரவேசம்.

மறுநாள் மதுரை **J.M.**குருநமசிவாயம் அவர்களின் இல்லத்தையடைந்தேன். இதைப்பற்றிச் செய்தித்தாள்களில் காரசாரமாகச் செய்திகள் வெளிவந்தன. டாக்டர் தங்கராஜ் அவர்கள் பரிவுடன் சிகிச்சை செய்தார். எனக்கு இவ்வாறு இடர்விளைந்துவிட்டதே என்று கருதி ராஜாஜி, அனந்தராம தீகிமர் முதலியோர் கடிதங்கள் எழுதி ஆறுதல் கூறினார்கள்.

வாகீச கலாநிதி கி.வா.ஜ., குமரி அனந்தன் முதலிய அன்பர்கள் பலர் வந்து வந்து என்னைக் கண்டு தங்கள் அன்பைப் பொழிந்தார்கள். எனக்கு உடல் நலம் பெற 15 தினங்கள் ஆயின.

(தொடரும்)

## மண் அகழ்வை தடுக்குமாறு நீலங்காடு மக்கள் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் நீலங்காடு கிராமத்தில் மண் அகழ்வதனால் அக் கிராமத்திற்கான போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை காணப்படுகிறது. இதனால் அங்கு வாழும் மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இதனை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், காரைநகர் உதவி அரச அதிபருக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

காரைநகர் நீலங்காடு மீனவ கிராமத்தில் இருபது குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன. இம்மக்கள் பயன்படுத்தும் வீதிக்கு அண்மையில் மண் அகழப்படுவதால் வீதி இடிந்து முற்றாக அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை காரைநகர் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள மயானத்திற்கும் இவ் வீதியினூடாகவே செல்ல வேண்டும். இக்கிராமத்தில் மண் அகழ்வு தொடருமாயின் குறித்த வீதி முற்றாக அழிக்கப்பட்டு இக் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படும். ஆதலால் மண் அகழும் இடத்தினை நேரடியாக பார்வையிட்டு இக் கிராம மக்களின் போக்குவரத்தினை உறுதிப்படுத்துமாறு கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-7,246)

## தென்னை மரங்களில் "மைற்" கட்டுப்படுத்த புதிய வழிமுறை

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள "மைற்" நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த மருந்து விசிறுவதாகக் கூறி ஒரு சிலர், மக்களை ஏமாற்றி பணம் பறித்து வருகிறார்கள்.

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு இவ்வாறு பணம் பறிப்பவர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறு யாழ்.மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.சத்தியேந்திரன் கேட்டுள்ளார்.

அத்துடன் மைற் நோயைக் கட்டுப்படுத்த 20 கிராம் வெள்ளைப் பூண்டை விழுதாக அரைத்து 100 மில்லி லீற்றர் நீருடன் கலந்து அத்துடன் 5 கிராம் சவர்க்காரத்தை 100 மில்லி லீற்றர் நீரில் கரைத்து இவற்றுடன் 20 மில்லி லீற்றர் வேப்பெண்ணையையும் சேர்த்து மூன்றையும் ஒன்றாகக் கலக்கி துணியால் வடிகட்ட வேண்டும்.

வடிகட்டிய கலவையை ஒரு போத்தல் அளவுக்கு மேலும் 800 மில்லி லீற்றர் நீர் சேர்த்துத தெளி கருவி மூலம் சிறு குரும்பைகளின் மூள் பகுதியில் 2 மாதங்களுக்கு ஒருமுறை தெளிப்பதன் மூலம் மைற் நோயைக் கட்டுப்படுத்தலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-7,27)

## அரசியல் இலாபங்களுக்காக ஐ.தே.க. அரசுடன் இணையாது

பொதுக்கட்டமைப்பை பலப்படுத்த ஐக்கிய தேசியக்கட்சியும் ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்பட மறுத்தது தவறு என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறிய கருத்தினை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது.

இதுகுறித்து ஐக்கியதேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் இலாபங்களுக்காக ஐக்கிய தேசியக்கட்சி மாறியதில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்று தனது அரசியல் ஆதாயங்களுக்காக வெற்றிபெற்ற பின்னர் ஆளும் கட்சியுடன் கைகோர்த்துக்கொண்டிருக்கும் தேவை ஐக்கியதேசியக்கட்சிக்கு இல்லை.

நாட்டிற்கு நன்மை தரக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஐக்கியதேசியக்கட்சி தொடர்ந்தும் ஆதரிக்கும் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(க-9)

## பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துக! இல்லையேல் எதிர்க்கட்சியிடம் ஆட்சியைக் கையளிக்குக!

(கொழும்பு)

நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் மனம்திறந்து சேவையாற்றுவோம் எனக்கூறிக்கொண்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியாவிட்டால் ஆட்சிப்பொறுப்பை எதிர்க் கட்சியிடம் கையளிப்பதே சிறந்த வழியாகும் என பொது ஜன ஐக்கியமுன்னணி பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைக்கும் நோக்குடன் அமைக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பு திட்டத்தை நான் ஆட்சேபித்து வருவதாக ஊடகங்களில் வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை. பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிக்கு நான் முழுமையான ஆதரவை வழங்கி வருகிறேன்.

பொதுக்கட்டமைப்பை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கவேண்டும் அல்லது யுத்தத்தால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டும் ஆனால் யுத்தத்தின் மூலம் எந்த பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது என்பது சகலரும் அறிந்ததே.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான தீர்க்கமான முடிவை ஜனாதிபதி விரைவில் எடுப்பார். பொதுக் கட்டமைப்பு குறித்து ஜே.வி.பி. கொணடுள்ள நிலைப்பாட்டை அக் கட்சி மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது ஆட்சிப் பொறுப்பை எதிர்க் கட்சியிடம் கையளிப்பதே சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# அவசியமாயின் அணு ஆயுதமும் பயன்படுத்துவோம்

## வடகொரியா, ஈரானுக்கு அமெ.அச்சுறுத்தல்

(வோஷிங்டன்)

அவசியமானால் அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பேரழிவு ஆயதங்களை எங்களது பகை நாடுகள் தயாரிப்பது தெரிந்தால் அந்த நாட்டின் மது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தவும் தயங்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இப்படி ஒரு புதிய கொள்கையை வகுத்திருப்பதாக அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகள் பரபரப்பாக எழுதியுள்ளன. அமெரிக்க இராணுவ அமைச்சர் டொனால்ட் ரமஸ்பெலட் ஒரு இரகசிய இராணுவத்திட்டத்திற்குக் கடந்த கோடையில் அங்கீகாரம் கொடுத்தார். பகை நாடுகளைத் தாக்குவதற்கு அத்திட்டம் வகை செய்கிறது.

இடைக்கால உலகளாவிய தாக்குதல் உத்தரவு என்பது அந்த இரகசியத்திட்டத்திற்குப் பெயராகும். பேரழிவு ஆயுதங்களைப் பகை நாடுகள் குறிப்பாக ஈரான், வடகொரியா தயாரிப்பதாக தெரிந்தால் அவற்றின் மீது உடனே தாக்குதல் நடத்தத் திட்டம் வகை செய்கிறது.

இந்தத் திடடம் தொடர்பான விபரங்களை பிரபல வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு ஏற்ப அமெரிக்க விமானப்படையின் செயற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இரகசியத் திட்டத்திற்கு டொனால்ட் ரம்ஸ்பெல்ட் ஒப்புதல் அளித்த இரு மாதங்களில் அமெரிக்க விமானப்படையின் 8ஆவது பிரிவு தலைமைத் தளபதி புரூஸ் கார்ல்சன் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். எனது படைப்பிரிவில் உள்ள பி-2,பி-52 குண்டுவீச்சு விமானங்களின் வழக்கமான செயற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தேவைப்படுகிற நாடுகள் மீது தாக்குதல் தொடுக்க தயார் நிலைக்கு ஏற்ப அந்த மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. நாங்கள் மிகவும் எசசரிக்கையாக தற்போது செயல்படுகிறோம் என்பதே அந்த மாறுதல் ஆகும் என செரெவ் போா்ட் டைம்ஸ் எனும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் புரூஸ்கார்லசன் சொன்னார்.

உலகளாவிய அளவில் தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் வகுக்கவும், அதை செயலபடுத்துவதற்கும் எங்களுக்கு வல்லமை உள்ளது என அவர் சொன்னார். உலகின் எந்த பகுதி மீதும் அரை நாள் அல்லது அதற்கு குறைவான நேரத்தில் எனது படைப்பிரிவு விமானங்களால் தாக்குதல் நடத்திட முடியும் என்றும் அவர் கூறினார். (ற)

உலக தரிசனம்

# சுமாத்திராவில் பூமியதிர்வு

இந்தோனேஷியாவின் சுமாத்திராத்தீவில் பூமியதிர்வு ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று ஏற்பட்ட நில அதிர்வு 6.8 றிக்டர் எனப் பதிவாகியுள்ளது. இது பலமான அதிர்வு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிர்வால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

மக்கள் பீதியினால் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

எனினும் சுனாமிப் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லையென அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற-9)

## ஈராக்கிலிருந்து

# கஜகஸ்தான் இராணுவம் வாபஸ்

(அல்மாட்டி)

ஈராக்கில் இருந்து கஜகஸ்தான் நாடு தன் இராணுவத்தை திரும்பப் பெற இருக்கிறது.

தீவிரவாதத்துக்கு எதிரான போரை, ஈராக்கில் அமெரிக்கா தொடங்கிய போது, பல நாடுகளில் இருந்து இராணுவத்தை அனுப்பும்படி அமெரிக்கா கோரியது. அதை ஏற்று கஜகஸ்தான் நாடும் தன் இராணுவத்தை அனுப்பி இருந்தது.

நம் இராணுவத்தின் பணியை முடித்துக் கொள்வது பற்றி நாம் சிந்திக்கும் நேரம் வந்துவிட்டது. ஜுலை மாத முடிவில், இராணுவம் திரும்ப அழைத்துக் கொள்ளப்படும். அதற்குப் பிறகு இராணுவம் அனுப்பப்பட மாட்டாது என்று அந்த நாட்டு இராணுவ மந்திரி முக்தார் ஆல்ட்டியான் பயோப் கூறினார். (ற)

# அக்னி-3 ஏவுகணை இவ்வாண்டு ஏவப்படும்

(புதுடில்லி)

மூவாயிரம் கி.மீ தூர்ம் சென்று தாக்கக்கூடிய, தரையிலிருந்து, தரையிலக்கு நோக்கிச் செல்லக்கூடிய அகனி-3 எனும் ஏவுகணை இநத ஆண்டுக்குள் ஏவப்படும் என்று பிரபல இந்திய விஞ்ஞானி நடராஜன் தெரிவித்துள்ளார்.

இந்தியா பல்வேறு ஏவுகணைகளை சோதித்து வருகிறது. அக்னி, ஆகாஷ், பிரித்வி, திரிசூல் போன்ற பலவிதமான ஏவுகணைகள் இந்திய அரசால் ஏவப்பட்டு சோதித்துப் பார்க்கப் பட்டுளளன. இதில் அக்னி போன்ற ஏவுகணைகள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஒரு புதிய ஏவுகணையை இந்தியா சோதித்துப் பார்க்க உள்ளது. மூவாயிரம் கி.மீ.தூரம் சென்று தாக்கக்கூடியது இந்த அக்னி -3 ஏவுகணை. தரையில் இருந்து தரை நோக்கிச சென்று தாக்கக்கூடிய இந்த ஏவுகணை இந்த ஆண்டுக்குள் ஏவப்படும் என்றும், அக்னி -1, அக்னி -2 ஆகிய ஏவுகணைகள் இராணுவத்தில் சேர்க்கப்படும் என்றும இந்தியாவின் பிரபல விஞ்ஞானி டாக்டர் நடராஜன் தெரிவித்துள்ளாா.

இது குறித்துக் கூறிய அவர், அக்னி -3 ஏவுகணை வளர்ச்சித்திட்டத்தில் உளளது. இது அடுத்த ஆண்டுக்குள் ஏவப்படும் என்று கூறினார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ பெர்னாண்டஸ் இந்த ஏவுகணை 2003இல் ஏவப்படும் என்று கூறியிருந்தார். பிறகு 2004 மத்தியில் ஏவப்படும் என்று அறிவிக்கப்படடது. பிறகு அதில் சில தொழில்நுட்பக் கோளாறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து இந்த ஏவுகணைச் சோதனை தள்ளிவைக்கப்பட்டது. தற்போது இந்த ஏவுகணை இந்த ஆண்டுக்குள் ஏவப்படும் என்று நடராஜன் கூறியிருக்கிறார்.

ஆகாஷ் ஏவுகணை சோதனை இதுவரை 9 முறை வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்று கூறிய அவர், 'நாக்' டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளும் சோதனைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவத்துள்ளார். (ற)

# எல். கே அத்வானி பாக்.இற்கு விஜயம்

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித்தலைவருமான எல். கே.அத்வானி ஒரு வாரகால விஜமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 30ஆம் திகதி பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார்.

பாகிஸ்தான் அரசின் அழைப்பையேற்று அங்கு செல்லும் அத்வானி பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப், பிரதமர் செளகத் அஸஸ் ஆகியோரையும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாகூர், கராச்சி மற்றும் சிந்துமாகாணத்தில் அவர் பிறந்த இடமான ஹைதராபாத் இஸ்லாமாபாத் ஆகிய இடங்களுக்கும் அத்வானி செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் 1970ஆம் ஆண்டு தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்தபோது அத்வானி பாகிஸ்தானுக்கு விஜயம் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# அணுத்திட்டத்தைக் கைவிடும் எண்ணம் ஒருபோதுமில்லை

## ஈரான் அறிவிப்பு

அணுத்திட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை என்றும், எனினும் அந்த திட்டம் ஆரம்பிக்கப்படுவது தாமதிக்கப்படலாம் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணுத்திட்டத்தை மேற்குலகம் எதிர்த்து வருகின்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடாத்தப்படும் பேச்சுவார்த்தையின் காரணமாக அணுத்திட்டத்தை ஆரம்பிப்பது சில வாரங்கள் பிற்போடப்படலாம் என்று பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஈரானின் பிரதான ஏற்பாட்டாளர் ஹசன் ரோகானி தெரிவித்துள்ளார்.

இந்தத திட்டத்தினால் ஐரோப்பிய ஒன்றியம அமெரிக்கா ஆகியவற்றுடன் ஈரானுக்கு தோன்றியுள்ள சர்ச்சைகள் சில காலத்திற்கு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் எதிர்வரும் ஜுன் மாதம் 17ஆம் திகதி ஈரானில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால் அணுத்திட்டம் ஆரம்பிக்கப்படுவது மேலும் தாமதமடையலாம் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கும் அணுத் திட்டத்திற்கும் தொடர்புகள் இல்லாத போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவது தங்கியுள்ளது.

அணுத்திட்டத்தைக் கொண்டு அணு ஆயுதங்களை ஈரான் தயாரிக்கக்கூடும் என்று அமெரிக்கா அச்சம் வெளியிட்டுள்ள போதிலும் நாட்டின் மின்சாரத் தேவைக்கு இந்தத் திட்டம் பயன்படுத்தப்படும் என்று ஈரான் கூறிவருகின்றது. (ற-9)

## அபுகிராப் சிறையில் கைதிகள் துன்புறுத்தல்;

# அமெ. இராணுவத்தினருக்கு மோத சிறைத் தண்டனை

(வோஷிங்டன்)

ஈராக்கில் அபுகிராப் சிறைச்சாலையில் கைதிகளைத் துன்புறுத்திய அமெரிக்க இராணுவத்தினருக்கு ஆறுமாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் அபுகிராப் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை அமெரிக்க இராணுவத்தினர் துன்புறுத்திய புகைப்படங்கள் பத்திரிகை ஒன்றில் வெளியானதை அடுத்து இந்தப் பிரச்சினை விஸ்வருபமெடுத்தது.

பத்திரிகையில் வெளியான புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணைகளில் அபுகிராப் சிறைச்சாலையில் கடமையிலிருந்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குற்றம் புரிந்தமை உறுதி செய்யப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட இராணுவ விசாரணை சபை சம்பந்தப்பட்ட அமெரிக்க இராணுவத்தினருக்கு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (ற-2)

# ஒருவாரம் இடம்பெற்ற மோதல்களில் நேபாளத்தில் பலர் கொல்லப்பட்டனர்

(உதைப்பூரி)

நேபாளத்தின் கிழக்கு மாவட்டமான உதைப்பூரில் படையினருக்கும் மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் இந்த வாரம் இடம்பெறற கடுமையான மோதல்களில் பலர் கொல்லப பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இரு தரப்பினரும் தத்தமது பிரிவுகளில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளதுடன் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளில் 48 பேரும் படையினரில் 9பேரும் கொல்லப்பட்டதாக நேபள இராணுவம் தெரிவித்துள்ள அதேவேளை, படைத்தரப்பில் 35பேரும் தமது தரப்பில் 3 பேரும் உயிரிழந்துள்ளதாக தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் கட்சி அதிகாரத்தை மன்னர் ஞானேந்திரா கைப்பற்றியதைத்தொடர்ந்து நேபாளம் முழுவதும் வன்முறை இடம்பெற்றவண்ணமுள்ளது.

இதேவேளை ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஞானேந்திரா பொறுப்பேற்ற பின்னர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட எதிர்க்கட்சி தலைவர்களில் 9 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள் மூவர் உட்பட 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் ஞானேந்திரா ஆட்சியைக் கைப்பற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 7 கூட்டணிக் கட்சிகள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களில் இந்த 9 பேரும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ற-9)

# உஸ்பெகிஸ்தான் வன்முறை தொடர்பில் சர்வதேச விசாரணை நடாத்தப்படவேண்டும்

(உஸ்பெகிஸ்தான்)

உஸ்பெகிஸ்தான் அன்ரிஸா நகரில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென்ற அழுத்தங்களுக்கு அமெரிக்காவும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அன்ரிஸா நகரில் கடந்தவாரம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது படையினர் நடத்திய தாக்குதலில் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமைகள் குழு கோரியுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் இதற்கு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளன.

இந்த நிலையில் நியாயமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் கோரிக்கை விடுத்துள்ளது.

உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் இந்தச் சம்பவம் தொடர்பாக பொறுப்புணர்வுடன் பக்கச்சார்பற்ற வகையில் விசாரணைகளை நடத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை உஸ்பெகிஸ்தான் அரச படைகளும் பொதுமக்களும் அமைதியை நிலைநாட்டுவதுடன் வன்முறைகளையும் தவிர்க்க வேண்டும் என்றும் பல தரப்பிலும் கேட்கப்பட்டுள்ளது. (ற-9)


## மஹா கும்பாபிஷேகம்

புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் வீராமலை முருகமூர்த்தி ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

முதல்நாள் சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் எண்ணெய்க் காப்பு சாத்துகின்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(க-7-126)

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை - குறள்

வலம்புரி

## திட்டமிட்ட நிவாரணப் பணியே தேவையானது

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவார்களானால், நாட்டின் சமாதானம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கவே செய்யும்.

இயற்கை அனர்த்தம். இன, மத, மொழி வேறுபாடின்றி இந்த நாட்டின் மக்களைப் பாதித்துள்ளது. எனவே இவ் விடயத்தில் எந்தவித பாகுபாடும் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வது அனைத்துத் தரப்பினரின் கடமையாகும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது பாதிப்பின் தன்மைக்கேற்ப நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதேவேளை மேற்கொள்ளப்படுகின்ற நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் நுகர்வை ஈடுசெய்வதாக மட்டும் அமையாமல் வீடு, குடிநீர், தொழில் முயற்சி, கல்வி, மருத்துவம் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைவது மிகவும் அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் பின்னடைவான அபிவிருத்தி நிலைமைக்கு ஒழுங்கான திட்டமிடல் இன்மையே காரணம் எனலாம். முன்கூட்டியே ஆய்வின்றி - திட்டமிடல் இன்றி கட்ட்டங்களை கட்டுவது பின்னர் அதனை உடைத்து விடுவது போன்றவை சாதாரண நிகழ்வுகளாகும். இதேபோன்று பொதுமக்கள் மத்தியிலும் திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லை என்றே கூறவேண்டும்.

குறிப்பாக ஆலயங்களை அமைப்பது பின்னர் அதனை உடைத்து புதிதாக நிர்மாணிப்பது, அரச நியதிகளின்படி வீடு, மதில் போன்றவற்றை அமைக்காது விடுவது போன்ற குறைபாடுகள் நிறையவே உண்டு.

இதனால் பொதுச் சட்டங்களை அமுல்படுத்துவது தடைப்பட அதனால் பொதுமக்களே பாதிப்படைகின்றனர். எனவே சுனாமியின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் நிர்மாணப் பணியில் ஓர் பொதுவான யாப்பை அமைத்துக்கொண்டு அதனை அனைவரும் கடைப்பிடிக்கத்தக்கவாறு திட்டமிடலை மேற்கொள்ளவேண்டும்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்போது கடற்கரையிலிருந்து எந்தளவு தூரத்தில் கட்டடங்கள் அமையவேண்டும் என்ற நியதிகளை சரியான முறையில் கடைப்பிடிப்பது அவசியமாகும். இதற்குள் செல்வாக்கு க்லாசாரங்கள், அரசியல் தலையீடுகள் இருக்குமேயானால் மீள் நிர்மாணப் பணிகளால் எந்தவித பயன்பாடும் இன்றிப்போகும் என்பது உறுதி.

அதேவேளை வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றபோது எழுந்தமானமான தீர்மானங்களை எடுத்துக் கொண்டு அதனை நடை முறைப்படுத்த முற்படுவதும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள், கலை கலாசார விழுமியங்களிலும், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றிலும் எதிர்விளைவையே ஏற்படுத்தியது.

இந்தியா போன்ற நாடுகளில் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள் யாவும் பெருவெற்றியைத் தந்துள்ளன. ஆனால் அந்த நிலைமை நம் நாட்டிற்கு பொருத்தமற்றதாக அமைந்தமையால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது அந்த மக்களின் பின்புலங்கள், கலை, கலாசாரப் பின்னணிகள் பற்றி முக்கிய கவனம் எடுப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

# நிலையான கொள்கை முன்னெடுக்கப்படின் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இணக்கப்பாட்டுக்கு அரசியல் மீது நிறுவப்பட்ட நிலையான கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமென எதிர்க்கடசித் தலைவர் ரணில் விககிரமசிங்க தெரிவித்துள்ளாா.

ஆசியாவில் முதலாவதாக நவீன மயப்படுத்தலுக்கு உள்ளான இலங்கை இன்று பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. காலத்துக்குக் காலம் கொள்கைகளை மாற்றிக்கொள்வதே இந்த நிலைமைக்குக் காரணமாகும். உத்தேசிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இலங்கை வர்த்தக சம்மேளன உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடாததுவதற்காக இடம்பெற்ற விசேட சந்திப்பில் உரையாற்றும போதே அவா் இவ்வாறு தெரிவிததார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், உண்மையாகவே இன்று நாட்டில் ஏழ்மை அதிகரித்துள்ளது. கடந்த 10 வருடங்களில் ஒப்பீட்டளவில் வறுமை நிலை உயர்ந்துள்ளது. மாகாண மட்டத்தில் எடுத்துக்கொண்டால் யுத்தததினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏழ்மை அதிகரிததுள்ளது. வட மத்திய மாகாணம், ஊவாமாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாணம் போனறவற்றில் வறுமை குறைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை எடுத்துக்கொண்டால் பொதுக கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுததியதன மூலம் அந்த நாடுகள் அபிவிருத்தியை அடைந்துள்ளன எனினும் இணக்கப்பாட்டின் பிரதான காரணஙகள் தொடர்பாக விவாதித்துக் கொண்டிருக்கும் நாடுகளில் பலன்கள எட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

(ற-8)

# சமாதான முன்னெடுப்பு நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## உலக வங்கியின் பிரதித் தலைவர் வலியுறுத்து

(கண்டி)

இலங்கையின் சமாதான செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அபிவிருத்திப் பஙகாளிகளைப் பொறுத்த வரையில் இலங்கை மீதுள்ள அவற்றின் ஆர்வத்தின் அடித்தளமாகவுள்ளவை சமாதான செயற்பாடுகளே என உலக வங்கியின் பிரதித்தலைவர் பிரபுல்பட்டேல் தெரிவித்துள்ளார்.

இதுவே பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கான ஒரேவழியென்றதால் சா்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களும் இதனையே ஆதரிக்கின்றன. இது ஒரு புதிய உறுதிமொழிகளை வழங்கும் மகாநாடல்ல எனவும் அவா் குறிப்பிட்டாா்.

கணடியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இறுதி நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையின் அபிவிருத்திக்கென குறிப்பாக ஆழிப்பேரலையின் பின்னரான இலங்கையின் புனரமைபபுக்கென நாங்கள் நிதிகளை வழங்கியுள்ளோம். ஆனால அந்த நிதியினை செலவிடுவதற்கு பொதுக்கட்டமைப்பு அவசியம் அது உருவாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியினை வற்புறுத்தியிருக்கின்றோம்.

ஆனால் பொதுக்கட்டமைப்பு விடயத்தினைப் பேசுவதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவேன் எனத் தெரிவித்திருந்தார். அதற்கு எமது முழு ஆதரவும் பலமும் இருக்கும் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பினை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தும் போது அது சமாதானப் படிக்கட்டில் அடியெடுத்து வைக்கும் ஓர் முயற்சியாகவே அமையும். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து நடைமுறையிலிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிப்பதோடு அமைதிப் பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனபதையே தாமும் உதவி வழங்கும் நாடுகளும் வலியுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4,6)

# திறைசேரி வசமுள்ள பங்கினை கூ.தாபனத்திடமே கையளிக்குக!

## பெ.கூ.தா.தொழிற்சங்கம் நிதியமைச்சருக்கு மகஜர்

(கொழும்பு)

திறைசேரி வசமிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கினை மீண்டும் கூட்டுத்தாபனத்திடமே கையளிக்குமாறு அதன் தொழிற்சங்கம் நிதியமைச்சருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

திறைசேரி வசமிருக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கினை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னா் மீண்டும் கூட்டுத்தாபனத்திடமே கையளிக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க ஒன்றியம் நிதியமைச்சா் சரத் அமுனுகமவைக் கேட்டுள்ளது.

இதுதொடா்பாக மின்சக்தி அமைச்சா் சுசில் பிரேம ஜயந்தவிற்கும் தொழிற்சங்கத்தால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலனுப்பிய மின்சக்தி அமைச்சா், அது சம்பந்தமான உபகுழு அறிக்கை அமைச்சரவைக்கு சமா்ப்பித்திருப்பதாகவும இவ்விடயம் தொடா்பாக நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தாா்.

இதையடுத்தே தமது தொழிற்சங்கம் தற்போது நிதியமைச்சருக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருப்பதாக பெற்றோலியக கூட்டுத்தாபனத்தின் பொது ஊழியர் சங்கத் தலைவர் லக்ஷமன் ஆனந்த தெரிவித்தார்.

(ற-4)

# 'தீர்மானியுங்கள் அல்லது தீர்மானிப்போம்'

## குளக்கோட்டன் படை துண்டுப்பிரசுரம்

(திருகோணமலை)

தீா்மானியுங்கள் அல்லது தீா்மானிப்போம் என்னும் தலைப்பில குளக்கோட்டன் படைப்பிரிவு என்ற அமைப்பினால் திருகோணமலையில் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழர்களின் கலாசார பூமியில் மிகக் கேவலமான முறையில் சட்ட ஒழுங்குகளையும் மீறி புத்தா் சிலை வைக்கப்பட்ட விடயம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் ஓா் அடித்தளமாகவே பாா்க்கின்றோம்.

உடனடியாக இதை அகற்றாவிட்டால் ஏற்கனவே எம்மால் முடிவெடுக்கப்பட்ட மாற்றுவழியைப் பயன்படுத்தவுள்ளோம். இருப்பினும் இதற்கு உரிய முடிவு இல்லையேல் எதிா்ப்பைத் தொடருமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடப்படுகின்றது.

யாவா்க்கும் பொதுவான சட்டத்தை பாரபட்சமின்றி செயற்படுததுமாறு பொலிஸ் நீதித்துறை சாா்ந்தவா்களைக் கேட்டுக கொள்வதோடு தவறும் பட்சத்தில் தீா்மானிக்கப்பட்ட மாற்றுவழிகள் பயன்படுத்தப்படும் எனவும் எச்சரிக்கின்றோம்.

எனவே பின்னா் ஏற்படும் விளைவுகளை மேலே கூறப்பட்டவா்களே பொறுப்பேற்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

(ற-4)

# ஜனாதிபதியின் கொள்கையும் தலைமைத்துவமும் கண்டி மாநாட்டில் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டன

## யசூசி அகாஷி பாராட்டு

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையின் மூலம் கொள்கை, தலைமைத்துவத்தின் பொறுப்பை மக்கள் மத்தியில் வெளிப்படுததியதாக ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி தெரிவித்தாா்.

தனியாா் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின போதே அவா் இதனைத் தெரிவித்தாா்.

ஜனாதிபதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஆற்றிய உரையை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். அவா் மிகவும் தைரியசாலி. இதன் மூலம் அவரின் கொள்கையும் தலைமைத்துவமும் வெளிப்படுத்தப்பட்டது.

வேறுபட்ட கருத்துக்கள் அவரது உரையில் இருந்தாலும் பொதுக்கட்டமைப்பை நிறுவுவதில் அவா் அக்கறையாகவுளளாா். அது விரைவில் நிறுவப்படுமென நான் எதிா்பாா்க்கின்றேன்.

பொதுககட்டமைப்பு மூலம் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுககுமிடையே மாத்திரமன்றி முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகததினரிடையேயும் நம்பிக்கை கட்டி எழுப்பப்படும். இதன் மூலம் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமென்றும் யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார்.

(ற-8)

### தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பக்தர்கள் ஒன்று சேரும் போது முதலில் ஒருவன தன்னை மறந்த நிலையில் இறைவனைப் பற்றிப் பேசுகிறான். பின்னர் ஆனந்தத்தில் மூழ்கி அமைதியாகிறான். மற்ற பக்தனுக்குக் கடவுளைப் பற்றிப் பேசும் வாய்ப்பைக் கொடுத்துவிட்டு, அவன் இறைவனின் மகிமையைப் பற்றிக் கேட்கும் ஆனந்தத்தில் மூழ்கிறான்.

சுவாமி விவேகானந்தர்

# தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாவை புகழ்வது குற்றமல்ல

## பாவாணன் வழக்கில் இந்திய ஆய்வுக்குழு தீர்ப்பு

தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை புகழ்ந்து பேசுவது ஒன்றும் குற்றம் அல்ல என்று தமிழின உணர்வாளர் பாவாணன் மீது தொடரப்பட்ட பொடா வழக்கை மீளாய்வு செய்த பொடா மறுஆய்வுக்குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்தியாவிலேயே பொடா வழக்குகளில் கைதுசெய்யப்பட்டு இரண்டு வழக்குகளையும் சந்தித்தவர் பாவாணன். சென்னை ஆனந்த் திரையரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியதாக பழநெடுமாறன், சு.ப.வீரபாண்டியன் உள்ளிட்டோருடன் பாவாணன மீது ஒரு வழக்கும் ஈரோடு கவுந்தப்பாடி எண்ற ஊரில் தமிழீழத்தேசியத் தலைவர் பிரபாகரனை புகழ்ந்து பேசியதற்காக மற்றொரு பொடா வழக்கும் தொடரப்பட்டன.

சென்னை வழக்கில் இருந்து அனைவரையும் விடுவித்து வழக்கை திரும்பப்பெறுமாறு ஏற்கனவே பொடா மறு ஆய்வுக்குழு தமிழ் நாட்டு அரசுக்கு உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் கவுந்தப்பாடி வழக்கையும் திரும்பப்பெற தமிழ் நாட்டு அரசுக்கு பொடா மறுஆய்வுக்குழு உத்தரவிட்டிருந்தது.

தமிழீழத்தேசியத்தலைவர் பிரபாகரனை புகழ்ந்து பேசுவது குற்றமாகாது என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# நாத்தாண்டியாப் பிரதேசத்தில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அண்மித்த பிரதேசமான நாத்தாண்டியாவில் இலங்கை விமானப்படை வீரர் ஒருவரின் வீட்டில் இருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகள், விமானப்படையினரின் சீருடைகள் ஒருபகுதி மற்றும் சில ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தமக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் குறிப்பிட்ட வீட்டை சோதனை செய்தபோது அவை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனை மேற்கொள்ளப்பட்ட போது குறிப்பிட்ட விமானப்படை வீரரின் மனைவி கைதுசெய்யப்பட்டார். விமானப்படை வீரர் சரணடைந்ததை அடுத்து அவரது மனைவி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தம்புட்டுவல விமானப்படை முகாமில் இருந்து மேற்படி ஆயுதங்களை திருடிவந்து சட்டவிரோதமாக அவற்றை விற்பனை செய்வதே விமானப் படை வீரரின் நோக்கம் என்று கொஸ்வத்தை பொ்லிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-4)

# மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி சவப்பெட்டி ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்திற்கு முன்னால் ஈ.பி.டி.பியினர் நேற்று சவப்பெட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட ஆறுமுகம் முருகுப்பிள்ளையின் சவப்பெட்டியை அவர்கள் தங்களது அலுவலகத்தில் இருந்து எடுத்துச் சென்று கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கு முன்னால் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.சுமார் ஒன்றரை மணிநேரம் இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.(ச-4)

## ஜாதிக....

பாராளுமன்றத்தை விட்டு வெளியேறிய ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனப் பேரணியாகச் சென்று புறக்கோட்டை அரசமரச் சந்தியில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். (ச-4)

## திருமலை...

இருப்பதன் காரணமாக பொலநறுவை, குருநாகல், சிலாபம் ஆகிய மாவட்டங்களிலிருந்து சுமார் 500க்குமமேற்பட்டபொலிஸார் திருமலைக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள பிரதேசம் முற்று முழுதாக இராணுவத்தினரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் அதனைப் பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பும் இராணுவத்துடையதே என இராணுவப்பேச்சாளர் தயாரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருமலை நகரின் மத்தியில் நேற்றும் இரு குண்டுகள் வெடித்திருக்கின்றன. இதில் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் பிற்பகல் 3.45 மணியளவில் மஹா மாயாபுர அனுத்தம சந்தியிலும், மற்றைய குண்டு மாலை 7.55 மணியளவில் உவர்மலை கீழ்வீதியில் உள்ள விடுதியிலும் இடம் பெற்றுள்ளது.

இக் குண்டு வெடிப்பின் காரணமாக இரு வாகனங்களுக்கு சேதமேற்பட்டுள்ளபோதும் எவருக்கும் காயமேற்படவில்லை.

இதேவேளை திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரனுக்கு கொலை அச்சுறுத்தல் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அவர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளதாகவும் தமிழ் மக்கள் பேரவையினர் தெரிவித்தனர் . இதேவேளை துறைமுக அதிகார சபையில் கடமையாற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் கடமைக்குச் செல்லும் போது மட்கோவ் என்னும் இடத்தில் சிங்களவர்களால் தாக்கப்பட்டுள்ளனர். (ச-4)

# தனிமையிலிருந்த இளம் பெண்ணை தாக்கி விட்டு பொருட்கள் திருட்டு

## புலோலியில் சம்பவம்

(பருத்தித்துறை)

தனியாக வசித்து வந்த இளம் பெண் பலமாக தாக்கப்பட்டு அவரிடம் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2மணியளவில் புலோலி புற்றளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வி.மெல்லியல் என்ற இளம் பெண்ணே தாக்கப்பட்டவராவார்.

தனித்து வாழ்ந்துவரும் இவர் சம்பவ நேரம் ஆழ்ந்த உறக்கத்தில இருந்த போது திருடர்கள் சமையல் அறை ஜன்னல் வழியாக கதவைத திறந்து வீட்டினுள் புகுந்துள்ளனர். மேசையில்கழற்றி வைக்கப்பட்டிருந்த ஒரு சோடி தோட்டையும் அவரது கைப்பையில் இருந்த கைக்கடிகாரத்தையும் ஒரு தொகை பணத்தையும் எடுத்த திருடர்கள் பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை திடுக்கிட்டெழுந்த அப்பெண்ணை வார்த்தயால் கடுமையாகத் தாக்கினர்.

தாக்குதலுக்கு இலக்கான பிரஸ்தாப பெண் கூக்குரலிடவே திருடர்கள் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடி விட்டனர். இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-7)

## பொதுக்கட்ட...

கொள்ளல்வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பி நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு மூலம் குறித்த நான்கு தத்துவங்களும் மீறப்படுவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதில் முக்கியமாக தெற்காசியப் பிராந்தியப் பாதுகாப்பிற்கு பொதுக் கட்டமைப்பானது பாரிய அச்சுறுத்தலை வெளிப்படுத்துவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை இம்மாற்று யோசனைகளின் அடிப்படையில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஜே.வி.பி முடிவு செய்துள்ளது. (ச-4)

## கிளைமோர்...

நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் படுத்தப்படவுள்ளார். குறிப்பிட்ட சிறைச்சாலை வாகனத்தில் இவர் அழைத்து வரப்படுவதாகக் கருதி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-4)

## மட்டு...

இருந்து விலகி ராசிக்குழுவில் செயற்பட்டு வந்தவரென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும், மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொளவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-8)

# தமிழர்கள் மீது யுத்தத்தை...

இலங்கை தீவகத்திற்கு கொண்டு வந்து தமிழர் தாயகத் திற்கும் சிங்கள தேசத்திற்கும் பகிர்ந்து கொள்கிற ஒரு நியாய பூர்வமான ஒழுங்கமைப்பு என்று நாம் எண்ணவில்லை. முழுக்க முழுக்க அரசின் ஒருதலைப்பட் சமான-ஒருதரப்பான கருத்துக்களை நம்பவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகவே நாங்கள் பார்க்கிறோம்.

ஏனென்றால் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின்பிரதிநிதிகள் எவருக்குமே சர்வதேச சமூகத்திற்கு உண்மைகளை எடுத்துச் சொல்கிற வாய்ப்புகள் அளிக்கப்பட வில்லை. இவை எல்லாம் புறம் தள்ளி எமது தாயகத்திற்கு ஏற்பட்ட பேரழிவுகள், தேவைகள், மனிதாபிமான நெருக்கடிகள் பற்றிய உண்மை நிலையை எடுத்துச் சொல்வதற்கான சூழலைத் தவிர்த்து தமிழர் தாயகத்தின் பேரழிவை முழு அளவில் இருட்டடிப்பு செய்துதான் இந்த மாநாட்டை அரசாங்கம் ஒப்பேற்றி இருக்கிறது.

நாங்கள் இன்று கேள்விப்படுகிறோம். பலநாடுகள் மிகக்கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளதாக,அதாவது விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து ஒரு பொதுக்கட்டமைப்பை கொண்டுவந்து அது சரியாக நிறைவேறும் பட்சத்தில்தான் தங்களது வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமென்று பல உதவிவழங்கும் நாடுகள், நிறுவனங்கள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றன.

ஆழிப்பேரலை மற்றும் யுத்த நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட எம் மக்கள் விரக்தி அடைந்த நிலையில் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இலங்கையில் மீண்டும் பாரிய நெருக்கடிச் சூழல் உருவாகும் என்று எடுத்து விளக்கியிருக்கிறோம். இதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு கொடுக்கப்போகிற அழுத்தங்களிலேதான் எதிர்காலம் அடங்கியிருக்கிறது என்பதை யசூசி அகாசியிடம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அவர்களும் அதை முழுமையாக ஏற்பதாகவும் சர்வதேச சமூகம் அனைத்தும் ஒன்றிணைந்து அரசுக்கு .அழுத்தம் கொடுக்கும் என்றும் சமாதான வழிமுறைகளின் கீழ் தீர்வுகாண்பதற்கும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் .தமிழ் மக்களுக்கு தீர்வு ஏற்பட தங்களால் முடிந்த அழுத்தத்தை கொடுப்பதாகவும் எங்களுக்கு அகாசி உறுதியளித்திருந்தார்.

சர்வதேச சமூகத்திற்கு இப்படியாக எங்களால் முடிந்தளவு உண்மை நிலைகளை விளக்கியிருக்கிறோம். இலங்கை அரசாங்கம் இதை முறியடித்து சர்வதேச உதவிகளை பெற்றுக்கொண்டு மீண்டும் தமிழர்கள் மீது யுத்தத்தையோ ஆக்கிரமிப்பைத் திணிப்பதற்கான ஒரு தந்திரோபாயத்தை, செயற்திட்டத்தை வகுத்துக்கொண்டு அவர்களும் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் இதுதான் இலங்கையில் இப்போதுள்ள நிலைமை.

**ஜே.வி.பியுடனான அரசின் உறவு**

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போர் யுத்தத்தை விரும்புகிறார்கள் என்று சந்திரிகா கேள்வி எழுப்பி உள்ளார். ஜே.வி.பிக்கும் ஜனாதிபதியின் கட்சிக்கும் ஒரு இறுக்கமான உறவு இருக்கிறது. ஆனால் வெளியிலேயான தோற்றப்பாடு தங்களுக்குள் ஏதோ முரண்பாடு இருப்பதாகவும் ஒரு தீர்வை இவர்கள் கொண்டு வருவதாகவும் ஜே.வி.பி எதிர்ப்பதாகவும் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஜனாதிபதி ஜே.வி.பியை திட்டுவார். அவர்கள் சந்திரிகாவைத்திட்டுவர். இரவில் கூடிக்கதைப்பார்கள். இது தமிழர்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கை என்பதை நாங்கள் விளங்கிக்கொள்கிறோம்.

கண்டியில் நடைபெற்றது ஒழுங்கமைக்கப்பட்ட முழு அளவிலான மாநாடு என்றால் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இடையிலே பேசுவதும் அறிக்கை கொடுப்பதும் நடக்காது.

ஒட்டுமொத்த சிங்கள தேசமும் தமிழர்களுக்கு உரிய தீர்வை தரப்போவதில்லை. முடிந்தளவு தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி தங்களை பலப்படுத்திக்கொண்டு தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பை இறுக்கிக் கொள்வதற்கான செயற்திட்டங்களே இவை எல்லாம்.

**பொதுக்கட்டமைப்பின் நோக்கம்**

உண்மையிலே இந்த பொதுக் கட்டமைப்பு தொடர்பாக அரசு தரும் போது நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும் என்று எங்களிடம் தந்தார்கள். அதை நாங்கள் நிராகரித்து விட்டு நாங்கள் எம் தரப்பில் இருந்து மாற்று யோசனைகளை முன்வைத்தோம். நாடாளுமன்றம் ஜனாதிபதி ஒன்றின் கீழ் கட்டுப்படுத்தக் கூடிய அமைப்பாக இது இருக்கக் கூடாது என்று கூறியிருந்தோம்.

தமிழர் தாயகத்தில் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கிறது. பேரழிவில் இருந்து கரையோர மக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்காக இலங்கைக்கு சர்வதேச சமூகத்தால் நல்லெண்ண அடிப்படையில் அளிக்கப்படுகின்ற நிதியை பகிர்ந்து கொள்ளத்தான் இந்த அமைப்பு.

இது சுதந்திரமாகத்தான் செயற்படவேண்டும். இது ஒன்றும் தமிழ் மக்களுக்கு தீர்வு தருகின்ற பூதாகரமான திட்டம் ஒன்றும் அல்ல. சர்வதேச சமூகம் அளிக்கின்ற நிதியம்கூட இலங்கையின் திறைசேரியின் கீழாக அல்லாமல் சர்வதேச அமைப்பு ஒன்றின் கீழாகத்தான் இயங்கும்.

ஆழிப்பேரலையைத் தொடர்ந்து இலங்கைக்கு சர்வதேச சமூகம் பெருமளவிலான நிதிஉதவிகளை அளிக்க முன்வந்துள்ளது. அந்த நிதி உதவியைப் பெற்று தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடியதாக செய்யவேண்டும் என்பதற்காகவே இந்தப் பொதுக் கட்டமைப்பு. அதாவது இலங்கையில் ஆழிப்பேரலையின் பாதிப்பின் அடிப்படையில் தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு உரிய பகிர்வளிக்கப்பட வேண்டும் என்பதற்கே பொதுக்கட்டமைப்பு. இதற்காக அவர்கள் சொல்வது போல் தமிழ்மக்கள் எதையும் ஏற்றுக்கொண்டோ எதையும் விட்டுக் கொடுத்து இறங்கிப் போனதாக அர்த்தம் .இல்லை. தமிழர்கள் தங்களுடைய உரிமை, சுதந்திரம், அபிலாசை ஆகியவற்றில் உறுதியாகவே இருக்கிறார்கள் என்றார் அவர். (ச)

எதிர்வரும் 24-05-2005 [செவ்வாய்] முதல்
என்.விஜயன் எழுதும்
தமிழகப் பயணம்
[பயணக் கட்டுரைத்தொடர்]
உங்கள் வலம்புரியில் வெளியாகும்

நிறைவ்சனாஸ் சங்கானை
விசால், பரத் ,ரிமுசென், விவேக் நடித்த
செல்லமே
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்ட யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
இன்று முதல்
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே:10.30, 2.30, 6.30 , 9.30(பு.நே)

மனோகரா யாழ்.
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த


கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.